# வாக்குண்டாம் - நல்வழி



T.24729

…சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
மற்றும் ஆய்வு மையம்
தஞ்சாவூர்

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 578

ஔவையார் அருளிய

# வாக்குண்டாம் - நல்வழி

சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்

முனைவர் **க. அன்பழகன்**

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்,**

மற்றும்

**ஆய்வு மையம்,**

**தஞ்சாவூர்.**

2016] [விலை: ரூ. 60-00

## நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | வாக்குண்டாம் - நல்வழி |
| பதிப்பாசிரியர் | : | முனைவர் க. அன்பழகன்<br>சிறப்புக்கேண்மைப்<br>பதிப்பாசிரியர், |
| வெளியிடுபவர் | : | இயக்குநர்,<br>சரசுவதி மகால் நூலகம்,<br>தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : | 578 |
| ISBN | : | 978-93-85343-16-2 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | 2016 |
| தாள் | : | TNPL 18.6 கி. கி |
| நூல் அளவு | : | 21 X 14 செ.மீ. |
| பக்கங்கள் | : | 64 |
| படிகள் | : | 500 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : | ஒளி அச்சுக்கோப்பு<br>மற்றும் ஒளி அச்சு,<br>சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : | லேமினேசன் அட்டை |
| பொருள் | : | இலக்கியம் |
| விலை | : | ரூ.60-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

உலகப் புகழ்பெற்ற சரசுவதி மகால் நூலகம் பன்மொழிகளின் கலைக் கருவூலமாகத் திகழ்கின்றது. இதன் கண் செயல்படும் தமிழ்த்துறையில் 7,700க்கு மேற்பட்ட பனை ஓலைச் சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அத்தகு சுவடிகளிலிருந்து நூலக மொழிப்பண்டிதர் மற்றும் சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர் களைக் கொண்டு புதிய நூல்கள் பதிப்பித்து வெளியிடும் பணியினையும் இந்நூலகம் செவ்வனே ஆற்றி வருகின்றது.

அவ்வகையில் ஔவையார் அருளிய வாக்குண்டாம்-நல்வழி என்ற அரும்பெரும் நீதி நூல் அணணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை பேராசிரியர் முனைவர் க. அன்பழகன் அவர்களை சிறப்புக்கேணமைப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளிவருகின்றது. ஔவை என்னும் சொல் காலந்தோறும் பல்வேறு பொருள்களில் புழங்கியமையையும் அறியமுடிகிறது. இலக்கியங்கள், நிகண்டுகள் போன்றவற்றில் இச்சொல் குறித்த பதிவுகளைக் காணமுடிகிறது.

அம்மை என்பதன் திரிபாகிய அவ்வை என்ற சொல்லுடன் சிறப்புணர்த்தும் விகுதியாகிய ஆர் சேர்ந்து அவ்வையார் (அம்மையார்) என்னும் சொல் பெண்களில் உயர்ந்தவரைக் குறிக்க வழங்கியது. தமிழகத்தில் தனிச்சிறப்புடன் விளங்கிய பெண்பாற் புலவர்களுள் இருவர் ஔவையார் என்னும் பெயருடன் இருந்தனர் எனத்தெரிகிறது. இவர்களுடைய இயற்பெயர் இன்னதென்று அறியக்கூடவில்லை. இவருள் ஒருவர் சங்க காலத்தில் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் இருந்தவர். மற்றவர் பன்னிரண்டாம் நூற்றாண்டில் கம்பர், ஒட்டக்கூத்தர் ஆகியோரின் காலத்தில் இருந்தவர்.

அறவிலக்கியக் காலத்தில் வாழ்ந்த ஔவையார் பாடியவையே அற இலக்கியங்களான ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி போன்றவையாகும். அன்றைய காலச்சூழலில் இவை மக்களிடையே பெரும் செல்வாக்கு பெற்றிருந்தனவாகும். இவை மனித வாழ்வின் ஒவ்வொரு தருணத்திலும் பயனாகும் வழிகாட்டல் கருத்துக்களைக் உள்ளடக்கியவையாகும். இவையே இவற்றின் சிறப்புக்கும் பெருமைக்கும் காரணங்களாகும். இன்றைய வாழ்விற்கும் பொருந்தக் கூடிய கருத்துக்களை உள்ளடக்கியிருப்பதும் இவற்றின் பெருமைக்குக் கூடுதல் காரணமாகும். இந்நூலினை சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர் முனைவர் **க. அன்பழகன்** பதிப்பித்துள்ளார் அவர்களுக்கு என் பாராட்டுக்கள்.

இந்நூலினை வெளியிட நிதியுதவி வழங்கிய அரசுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். புதிய வெளியீடுகள் வெளிவர சிறப்புடன் பணியாற்றும் நூலக நிருவாக அலுவலர் **அ. பூங்கோதை,** M. A., அவர்களுக்கும், நூலகர் முனைவர் **எஸ். சுதர்ஷன்,** M. A., B.Lit.. M.L.I.S. Ph.D அவர்களுக்கும், கணினியில் அச்சிட்டளித்த நூலகப் பணியாளர்களுக்கும், அச்சகப் பிரிவு பணியாளர்களுக்கும், ஏனையோருக்கும் என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மொழி ஆர்வலர்களும், மாணவ மாணவிகளும் இந்நூலினை வாங்கிப் பயன்படுத்தி தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

**ஆ. அண்ணாதுரை,** இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்.

தஞ்சாவூர்,
30-11-2016.

# முன்னுரை

ஒவ்வொரு மனிதருக்கும் அரிய தருணங்கள் கிட்டுவதுண்டு. அப்படித்தான் எனக்குக் கிட்டிய அரிய தருணமாக இதனை எடுத்துக்கொள்கிறேன். பாரம்பரியப் பெருமை மிக்க தஞ்சையம்பதியில் மகாராஜா சரபோஜியால் அமைக்கப்பட்ட கல்விக் கொடை சரசுவதி மகால் நூலகம். தமிழின் வரலாற்றின் அரிய பொக்கிஷங்களைப் போற்றிப் பாதுகாத்துவரும் அரிய நூலகம். இவற்றில் கையெழுத்துப் பிரதிகளாகவும், ஓலைச்சுவடிகளாகவும், புத்தகங்களாகவும் பல அரிய நூல்கள் காணக்கிடைக்கின்றன. அவ்வகையில் ஓலைச் சுவடிகளில் எழுதப்பெற்ற பழம்பெறும் இலக்கியங்களைப் பதிப்பித்து வெளியிடும் சிறப்புப் பணியைத் தொடர்ந்து சரசுவதி மகால் நூலகம் செய்து வருகிறது. இது அளப்பரியத் தமிழ்த் தொண்டாகும்.

தஞ்சை மாவட்டத்தின் ஆட்சி பொறுப்பை ஏற்று நடத்தும் மாவட்ட ஆட்சியர்கள் இதற்குத் தலைமையாக இருந்து இவ்வரிய பணிக்கு உறுதுணையாக நின்று தமிழ்த் தொண்டாற்றுவது உண்மையிலேயே பெருமையும், மகிழ்ச்சியும் கொள்ளத்தக்கவையாகும். அவ்வகையில் ஓலைச்சுவடிகளிலுள்ள பழம் இலக்கியங்களைப் பதிப்பிக்கும் அரிய தொடர்பணியில் என்னையும் பொருட்டாகக் கருதி ஔவையார் அருளிச்செய்த வாக்குண்டாம் மற்றும் நல்வழி எனும் நீதிநூற்களை வழங்கியமைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நூலக இயக்குநர் திரு. **ஆ. அண்ணாதுரை,** இ.ஆ.ப., அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நூல் வெளிவர ஊக்கமளித்து உதவி வரும் நிருவாக அலுவலர் திருமதி **அ. பூங்கோதை,** M. A., அவர்களுக்கும் என் நன்றி. நூலகர் முனைவர் **எஸ். சுதர்ஷன்**

அவர்களுக்கும், இப்பணிக்கென என்னைத் தேர்ந்து பரிந்துரைத்த அன்பு நண்பர் மதிப்பிற்குரிய சரபோசி என்கிற **மணி. மாறன்** அவர்களுக்கும் மற்றும் சரசுவதி மகால் நூலகத்திற்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளை உரித்தாக்குகின்றேன்.

மனிதன் தோன்றிய காலந்தொட்டு அவன் எண்ணங்களோடும் உணர்வுகளோடும் அறம் குறித்த ஒன்று இயைந்து இணைந்து வந்திருப்பதைக் காண முடிகிறது. மனிதப் பிறழ்வு நடக்கிறபோதெல்லாம் இந்த அறமே எச்சரிக்கையாக நின்று காத்திருப்பதையும் நமக்குப் பல இலக்கிய வரலாறுகள் சான்றுகளை எடுத்துக்காட்டி விளக்குகின்றன. அவ்வகையில் மனித வாழ்வின் பல்வேறு நிலைப்பாடுகளுக்கு உறுதுணையாக உதவும் சிந்தனைகளை கருத்துக்களை ஔவையார் அருளிச்செய்த வாக்குண்டாம் மற்றும் நல்வழி எனும் இவ்விரு நூல்களில் விளக்கமாகக் காணமுடிகிறது. ஒரு நூலினை விளக்கியுரைப்பதைவிட அதனை வாசித்துணர்வதே உற்ற பயனை நல்கும் என்பது திண்ணமாகும்.

இவ்வரிய பணிக்கு என்னை ஆளாக்கிய அத்தனை அன்புள்ளங்களுக்கும் மீண்டும் என் பணிவான நன்றியறிதலைப் புலப்படுத்திக்கொள்கிறேன்.

அன்புடன்,

முனைவர் ***க. அன்பழகன்***

# ஔவையும் தமிழ் இலக்கிய வரலாறும்

## அறிமுகம்

செம்மொழித் தகுதியுடைய தமிழ்மொழி இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்த பழமையையும், தொன்மையும் கொண்டதாகும். இவற்றிற்குச் சான்று கூறுவனவாக அமைவன அம்மொழியில் படைக்கப்பட்ட இலக்கியங்கள். பாடுபொருள், மொழியாளுமை, வெளிப்பாடு எனும் நிலைகளில் தமிழ்ப் பண்பாட்டை உள்ளடக்கி இவ்விலக்கியங்கள் பலவேறு மாறுதல்களைச் சந்தித்து வளர்ந்து நிற்கின்றன. இவ்வகையில் சங்க இலக்கியங்கள் நமக்கு மிகப்பெறும் பண்பாட்டுப் பேழையாகக் கிடைத்துள்ளமை பெருமைக்குரியது. இவை அவ்வக்கால மனித சமுதாயத்தை ஒழுங்குபடுத்தும் ஓர் அளவுகோலாக இருந்தமையும் உணரத்தக்கது. காலத்தின் தேவைக்கேற்ப மனித வாழ்வின் பிறழ்வுகளை மாற்றும் போக்கில் அற இலக்கியங்களின் தேவை உணரப்பட்ட காலமாக சங்க மருவிய கால இலக்கியங்கள் படைக்கப் பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். அறக்கருத்துக்களை வலியுறுத்தும் இலக்கிய வரிசையில் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை அளித்துள்ள படைப்பாளர்களுள் ஔவையாரின் இடம் மிக முக்கியமானவொன்றாகும். எனவே இச்சிறு நூல் ஔவையின் அறக்கருத்துக்களை மையப்படுத்தும் நோக்கில் வாக்குண்டாம் என்பது பற்றி அமைகிறது.

## ஔவையார்

“ஔ” என்னும் எழுத்து தனித்தமிழ்ச் சொற்களில் மொழிக்கு முதலில் மட்டுமே வரும் சிறப்புடையது. இது அகரமும் உகரமும் சேர்ந்த கூட்டு எழுத்தாகும். தமிழில்

வழங்கும் வடமொழிச் சொற்களில் மொழியின் இடையிலும் கடையிலும் இந்த "ஔ" என்னும் சொல் வருகிறது. ஔவை என்பதில் ஔ என்பது பெண்பாலைக் குறிப்பதாகும்.

ஔவை என்னும் சொல் காலந்தோறும் பல்வேறு பொருள்களில் புழங்கியமையையும் அறியமுடிகிறது. இலக்கியங்கள், நிகண்டுகள் போன்றவற்றில் இச்சொல் குறித்த பதிவுகளைக் காணமுடிகிறது.

**"அம்மை என்பதன் திரிபாகிய அவ்வை என்ற சொல்லுடன் சிறப்புணர்த்தும் விகுதியாகிய ஆர் சேர்ந்து அவ்வையார் (அம்மையார்) என்னும் சொல் பெண்களில் உயர்ந்தவரைக் குறிக்க வழங்கியது. தமிழகத்தில் தனிச்சிறப்புடன் விளங்கிய பெண்பாற் புலவர்களுள் இருவர் ஔவையார் என்னும் பெயருடன் இருந்தனர் எனத்தெரிகிறது. இவர்களுடைய இயற்பெயர் இன்னதென்று அறியக்கூடவில்லை. இவருள் ஒருவர் சங்க காலத்தில் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் இருந்தவர். மற்றவர் பன்னிரண்டாம் நூற்றாண்டில் கம்பர், ஒட்டக்கூத்தர் ஆகியோரின் காலத்தில் இருந்தவர்"**

எனக் கலைக்களஞ்சியம் குறிப்பிடுகிறது. (ப. 754)

ஔவை என்னும் பழஞ்சொல் சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, கம்பராமாயணம் போன்ற நூல்களில் முதியவள்/அன்னை என்ற பொருளிலும், திருக்குறள், மணிமேகலை போன்ற நூல்களில் தமக்கையைக் குறிக்கக் கூடிய சொல்லாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

ஔவை என்ற பெயர் தாய்க்கும் தெலுங்கில் பாட்டிக்கும்(அவ்வ) உரியதென்பர். செய்யவள் தவ்வையைக் காட்டிவிடும் என்ற குறளிலும (தம்-ஐ-)

தமக்கை என்ற பொருளிலும் ஐ வருகிறது. ஐ என்பது அண்ணன் என்ற பொருளிலும் புறநானூற்றில் பயிலுகின்றது. எனவே தமிழுக்குரிய ஐ என் சீரிய சொல்லின் தொடர்பால் இப்பெயர் ஆயிருக்கிறது. மேலோர் என்ற கருத்து இங்குள்ளது. அந்த மூத்தோள் அதாவது அனைவர்க்கும் தமக்கைப் போல்வாள் என்ற கருத்தில் ஆனதாம் எனவும்,

ஔவைப் பிராட்டி, ஔவைப் பாட்டி என அறியப்படுகிறார் ஔவைப் புலவர். பாட்டி, குழந்தைக்குக் கதை சொல்லுபவள். அதன் வழி நீதியை நினைவில் வைப்பவள். எனவே நீதியைப் பாடலாக நெய்தளித்த இப்பிராட்டியும் பாட்டியானார் தமிழினஞ் சிறார்க்கும் பெரியார்க்கும் நீதிக்கு இளமையிலேயே இத்தனை நல்ல இடம் தரும் நாடு வேறில்லையெனலாம். எனவும் போற்றப்டுகிறாள் ஔவை. இவ்வாறு பல்வேறு பொருள்களில் வழங்கப்பட்டமையும் இரண்டிற்கு மேற்பட்ட ஔவையார் வாழ்ந்தமையும் குறித்து பல சான்றோர்கள் கருத்துரைத்துள்ளார்கள்.

சங்க காலத்தில் வாழ்ந்த ஔவையார் மற்றும் அறநூல்கள் பாடப்பட்ட காலத்தில் வாழ்ந்த ஔவையார் எனும் இருநிலைகளை அடிப்படையாகக் கொண்டு பார்க்கலாம்.

**சங்க கால ஔவையார்**

சங்க கால ஔவையார் அகமும் புறமுமாக 59 பாடல்களை பாடியுள்ளார். விவரம் பின்வருமாறு.

சங்க இலக்கியம் – ஔவையார்

| *அகப்பாடல்கள்* | | | *புறப்பாடல்கள்* |
|---|---|---|---|
| குறுந்தொகை (15) | அகநானூறு (4) | நற்றிணை(7) | புறநானூறு (33) |
| தலைவன்(2) | தலைவி (4) | தலைவி (4) | |
| தலைவி (9) | | தோழி (2) | |
| தலைவி (4) | | கண்டோர் (1) | |
| தோழி (2) | | | |
| பரத்தை (1) | | | |
| செவிலி (1) | | | |

சங்க கால மரபு காதலையும், வீரத்தையும் இரு கண்களாகப் போற்றிய மரபாதலால் அதிலும் குறிப்பாக வீரம் முதன்மைப்படுத்தப்பட்ட சமூகமாக இருந்ததால் ஔவையாரும் தான் பாடிய பாடல்களில் வீரத்திற்கு முதன்மை கொடுத்திருப்பதை அவர் அதிகம் பாடிய புறநானூற்றுப் பாடல்கள் தெளிவுபடுத்துகின்றன. பரிசுபெறல், வாழ்வு வளம்பெறல் என்பது புலவர்களின் நோக்கமாக இருந்தாலும் தம் பாடல்களில் அக்கால மன்னர்களின் மாண்பைப் போற்றியிருக்கிறார்கள். அக்காலச் சமூகத்தின் மனித வாழ்வியலையும் அவற்றின் பண்பாட்டையும் அவற்றின் சிக்கல்களையும் அவற்றினை ஒழுங்குபடுத்தும் நோக்கில் அறத்தையும் பாடிய போக்கையும் காணமுடிகிறது. வீரம் என்னும் நிலையில் மன்னர்களைக் குறித்து பாடும்போதும் வெறும் புகழை மட்டும் பாடாமல், தவறு செய்த மன்னர்களைக் கண்டித்துத் திருத்தியிருக்கிறார்கள். மன்னர்களுடன் சிறந்த நட்பைப் பேணியிருக்கிறார்கள், மனித நேயத்தை, வள்ளல் தன்மையைப் பாராட்டியிருக்கிறார்கள். இப்படி பல்வகையானும் மாண்புறு பண்புகளைக் கொண்ட செயல்களை மேற்கொண்ட புலவர்களுள் ஒருவராக ஔவையையும் காணமுடிகிறது.

அகப்பாடல்கள் முழுமையும் தலைவன் வினைமேற் செல்லல், அதன் பொருட்டு தலைவியின் பிரிவு, தோழியின் ஆறுதல், தலைவன் நெஞ்சுக்குரைத்தல், பரத்தையின் மனம், மகள்பிரிவில் வருந்தும் செவிலியின் புலம்பல் எனப் பொருண்மையில் ஔவையின் சங்கப் பாடல்கள் அமைந்துள்ளன. எளிமை, சிறந்த உவமைகள், சொல்லும் முறையில் என ஔவையின் புலமைத்திறம் புலனாகிறது.

ஔவையின் வீரம் குறித்த கருத்துக்களைப் புறப் பாடல்களில் காணமுடிகிறது. இதன்வழி அன்றைய சமூகத்தில் மக்களிடையே பெற்றிருந்த செல்வாக்கையும் இப்பாடல்களின் வழி அறியமுடிகிறது. மிகச் சிறந்த ஆளுமையுடைய ஔவை மிகச்சிறந்த புலவராக மட்டுமின்றி பெண்மைத் தன்மையும், தன்மான மிக்கவராகவும் இருந்தமையையும் அவரது பாடல்களே சான்று காட்டுகின்றன. தனிச்சிறப்புடைய ஔவையின் மாண்பிற்குச் சான்றாக ஒரு சம்பவத்தைக் குறிப்பிடலாம்.

அதியமான் என்னும் மன்னனுக்கும் ஔவைக்கும் இருந்த நட்பு மிக உயர்ந்த நட்பாகும். இதனை உணர்த்தும் அற்புதம் இந்த நிகழ்வாகும். தனக்குக் கிடைத்த சாகாவரம் பெற்ற நெல்லிக்கனியைத் தான் உண்ணாமல் இவ்வுலகைக் காக்கும் மாண்புடையவர்கள் புலவர்கள்தான், அவர்கள் வாழ்ந்தால் நாடும் மன்னனும் வாழ்வார்கள் என்கிற உண்மையுணர்ந்த அதியமான் அந்த அரிய நெல்லிக்கனியை ஔவைக்குக் கொடுத்து உண்ணச் செய்த மாண்பு உலக இலக்கியங்களில் எங்கும் காணமுடியாது

**மன்னுக பெரும நீயே, தொல்நிலைப்**
**பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட**
**சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது**

**ஆதல்நின் அகத்து அடக்கி**

**சாதல் நீங்க, எமக்கு ஈந்தனையே.....**

என்று ஔவையார் நன்றி கூறும் இப்பாடல் அருமையான பாடலாகும்.

நாயன்மார் காலத்தில் அதாவது இடைக்காலத்தில் ஒரு ஔவையார் வாழ்ந்ததாகக் கூறும் கதையுண்டு எனவும் அறிஞர் மு. வ. குறிப்பிடுகிறார்.

அறவிலக்கியக் காலத்தில் வாழ்ந்த ஔவையார் பாடியவையே அற இலக்கியங்களான ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி போன்றவையாகும். அன்றைய காலச்சூழலில் இவை மக்களிடையே பெரும் செல்வாக்கு பெற்றிருந்தனவாகும். இவை மனித வாழ்வின் ஒவ்வொரு தருணத்திலும் பயனாகும் வழிகாட்டல் கருத்துக்களைக் உள்ளடக்கியவையாகும். இவையே இவற்றின் சிறப்புக்கும் பெருமைக்கும் காரணங்களாகும். இன்றைய வாழ்விற்கும் பொருந்தக் கூடிய கருத்துக்களை உள்ளடக்கியிருப்பதும் இவற்றின் பெருமைக்குக் கூடுதல் காரணமாகும்.

**ஔவை அறநூல்களின் தன்மையும் சிறப்பும்**

பொதுவாக மனித வாழ்வில் பின்பற்ற வேண்டிய அறக்கருத்துக்களை உள்ளடக்கியிருந்தாலும் அவை தனி மனிதனின் பண்பைச் சீரமைத்துச் செம்மைப்படுத்தும் ஆற்றலைக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். மனிதனின் அடிப்படையான பண்பு, பண்புச்சிதைவு, அதற்கான காரணம், அவற்றிற்கான தீர்வு, மனிதன் பின்பற்றவேண்டிய நெறிகள், அவற்றினால் விளையும் நன்மை என ஒரு நிரலான அமைப்பில் ஔவையின் பாடல்கள் அமைந்துள்ளன.

இளமையில் கல் என்பதுபோல இளம் வயதில் உருவாக்கப்படும் பண்புகளே வளர்ந்து பெரியவர்க

ளாகும்போது சமூகத்தில் இயங்க உதவும் என்பது கண்கூடு. அவ்வகையில் ஔவையார் சிறுவர்களுக்காகத் தன் இலக்கியங்களை வடிவமைத்துக்கொண்டமை அவரது சமூக அக்கறையையும் தனித்துவத்தையும் அடையாளப் படுத்துவனவாகும். அவ்வகையில் ஆத்திச்சூடி திருக்குறளை விடவும் சிறியதாக ஒரு வரியில் அறக் கருத்துக்களைப் பேசிய ஒன்றாகும். ஒற்றைவரியில் எளிமையாகவும் எளிதில் மனனம் செய்துகொள்ளத் தக்கதாகவும் சொற்களை அமைத்து ஆத்திசூடியை உருவாக்கியுள்ளமைப் போற்றுதலுக்குரியதாகும்.

**ஆத்திச் சூடி அமர்ந்த தேவனை**
**ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே.**

என்று தேவனை வாழ்த்தித் தொடங்குகிறார். இவற்றில் மொத்தம் 109 பாடல்கள் உள்ளன. இளம் வயதிலேயே சிறுவர்கள் மனத்தில் இருத்திக்கொள்ள வேண்டிய பண்புகளை இது செய், இது செய்யாதே, இதனை விரும்பு, இதனை விரும்பாதே, இதனை ஒழி என்பது போலச் சொல்லி பாடியுள்ளமை இந்நூலின் சிறப்புக்களில் ஒன்றாகும்.

**அறம் செய விரும்பு**
**ஆறுவது சினம்**
**ஊக்கமது கைவிடேல்**
**தந்தைத் தாய்ப் பேண்**
**இளமையிற் கல்**
**கெடுப்ப தொழி**
**செய்வன திருந்தச் செய்**
**நூல் பல கல்**
**ஊருடன் கூடி வாழ்**

போன்றவற்றை சில சான்றுகளாகக் குறிப்பிடலாம். பொருள் விளக்கம் தேவையின்றிப் புரிந்துகொள்ளத் தக்க வகையில் எளிமையாக இப்பாடல்கள் அமைந்துள்ளமை இவற்றின் சிறப்பிற்கு அணிகூட்டுவனவாம்.

**கொன்றை வேந்தன்**

ஆத்திச்சூடி போன்றே ஒற்றை வரியில் மனித வாழ்வின் அறங்களை வரங்கள் போலப் பேசுவது கொன்றைவேந்தனின் சிறப்பாகும். இவை பெரிய தொடர்களால் ஆனவை. ஆத்திச்சூடி என்பது அரிச்சுவடிப் பாடமென்றால் அதற்கு வளர்ந்த நிலை பாடமாகக் கொன்றை வேந்தனைக் கருதலாம். ஆத்திச்சூடி இரு சீர்களிலும் கொன்றை வேந்தன் நான்கு சீர்களில் அமைந்ததாகும்.

**கொன்றை வேந்தன் செல்வன் அடி இணை**
**என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே.**

என்று தொடங்குகிறது. இதில் மொத்தம் 91 பாடல்கள் உள்ளன. அறக்கருத்துக்களை அன்புவழியில் உரைப்பது போன்ற தொனியில் கொன்றைவேந்தன் அமைந்துள்ளது.

**அன்னையும் பிதாவும் முன்னறித் தெய்வம்**
**ஆலயம் தொழுவது சாலவும் நன்று**
**ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்**
**குற்றம் பார்க்கிற் சுற்ற மில்லை**
**சூதும் வாதும் வேதனை செய்யும்**
**தீராக் கோபம் போரா முடியும்**

எனச் சிலவற்றைச் சான்று காட்டலாம்.

**மூதுரை**

வாக்குண்டாம் எனப்படும் மூதுரை என்பது வளர்ந்த நிலையில் பின்பற்றப்படும் அறக்கருத்துக்களைக் கொண்டதாகும். மொத்தம் 31 பாடல்களைக் கொண்டதாகும். கல்வி, பொருள், நற்குணங்கள் இவற்றை வலியுறுத்தும் கருத்துக்களை உள்ளடக்கியதாகும். அதிகமாக நற்செயல்கள், நல்லவர்கள் பற்றிய கருத்துக்களில் கவனம் கொண்டுள்ளமை சிறப்பாகும்.

**நல்வழி**

மனிதனுக்கு நல்வழி காட்டுவதான கருத்துக்களை உள்ளடக்கியது இந்நூலாகும். ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வில் கடைப்பிடிக்கவேண்டிய நன்னெறிகளைக் கொண்டதாகும். இதில் மொத்தம் 41 பாடல்கள் உள்ளன.

**பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை**
**நாலுங் கலந்துனக்கு நான் தருவேன் – கோலஞ்செய்**
**துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்**
**சங்கத் தமிழ்மூன்றுந் தா...**

என்கிற விநாயக வணக்கப் பாடல் கடவுள் வாழ்த்தாக அமைந்துள்ளது. பாவ, புண்ணியத்தின் விளைவுகளையும் அவற்றின் கூறுகளாக ஈகை, குடிச்சிறப்பு, உழவு, மானம் போன்றவை புண்ணியத்திற்கும் தீவினை, ஈயாமை, பிறன்மனை விரும்புதல், பேராசை, தீயசொல் இவை பாவத்தின் விளைவுகளாகவும் பட்டியலிட்டுக் கூறுகிறது நல்வழி.

இச்சிறு நூலில் வாக்குண்டாம் மற்றும் நல்வழி இவற்றின் கருத்துக்களும் சிறப்புக்களும் விதந்தோதப் படுகின்றன.

**ஔவையின் மாண்பு**

ஒன்றுக்கு மேற்பட்ட ஔவைகள் இருந்தாலும் ஒவ்வொரு ஔவையும் தமிழ் இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தைத் தக்க வைத்துள்ளனர். சங்க இலக்கிய ஔவையார் அகமும் புறமுமாகப் பாடல்களைப் பாடியுள்ளார். குறிப்பாகப் பாலைத் திணையில் அதிகம் பாடல்கள் பாடியுள்ளமை புலனாகின்றது. வீரத்தை முதன்மைப்படுத்திய போக்கும் தெளிவாகிறது. மிகச் சிறந்த பண்புகளை உள்ளடக்கிய மாண்பையும் சங்க கால ஔவையிடத்துக் காணப்படுகிறது.

தன்னுடைய பாடல்களில் மிகச் சிறந்த உவமை களையும் புதுமையான வெளிப்பாடுகளையும் உள்ளடக்கிப் பாடியிருப்பது அவரை மிகச் சிறந்த புலமைமிக்கவராக உறுதிப்படுத்துகிறது. உணர்ச்சி மிக்கதாய் இவரது பாடல்கள் அமைந்துள்ளன. சேர, சோழ, பாண்டிய நாட்டு அரசர்களோடு ஔவை கொண்டிருந்த உறவும் பாடல்களில் வெளிப்படுவது அவரது பரந்த பொது நலத்தைப் பறைசாற்றுகிறது. அதே சமயம் மன்னனுக்காக தன்மானத்தை விட்டுக் கொடுத்

திராதச் சிறப்பையும் ஔவையிடம் காணமுடிகிறது. ஔவை என்றாலே முதியவள் என்கிற நிலைப்பாட்டை அவரது சங்க அகப்பாடல்களைக் கவனித்தால் மாற்றிக்கொள்ள நேரிடும். இளமை மிக்க உணர்ச்சி மிக்க இளம்பெண்ணாக ஔவை இருப்பாளோ என்கிற எண்ணத்தைச் சிந்தை கொள்ள ஏற்படுத்திவிடும் பாடல்கள், அவற்றின் பொருண்மையையும் அதையே உறுதிப்படுத்தும்.

நட்பிற்காக நண்பனைக் காப்பதற்கென்று தொண்டைமானிடம் மிகச் சிறந்த தூது நிகழ்த்திய ஔவையின் பேச்சு நல்ல தூதரின் மேன்மைப் பண்புகளின் அடையாளமாகும். இவருடைய சிறந்த புலமைக்குச் சான்றாகப் பின்வரும் புறநானூற்றுப் பாடலைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். நுட்பமான உணர்வுகளைத் தாயிடத்துப் பொருந்தியமைத்த பாடல்,

**வருபடை போழ்ந்து வாய்ப்பட விலங்கி**
**இடைப்படை யழுவத்துச் சிதைந்து வேறாகிய**
**சிறப்புப்படை யாளன் மாண்புகண் டருளி**
**வாடுமுலை யுறிச் சுரந்தன்**
**ஓடாப் பூட்கை விடலைத் தாய்க்கே**

என்கிறார். வீரத்தால் இறந்து கிடக்கும் தன் மகனைக் கண்ட தாய்க்கு மார்பில் பால் சுரந்தது என்கிற உணர்ச்சி உலக இலக்கியங்களில் எங்கும் காணமுடியாத வொன்றாகும்.

நீதி நூல்களின் ஔவை மிக உயர்ந்த நீதிகளை ஒற்றைத் தொடரிலும் நான்கு அடி பாடல்களிலும் என சிறுவர் தொடங்கி வளர்ந்த பிள்ளை, பெரியவர் என அனைவருக்கும் உரைப்பதும் அவ்வாறு உரைக்கப்பட்ட நீதிகள் இன்றைக்கும் பொருந்தி நிற்பதும் அவரின் மாண்பைத் தெற்றெனக் காட்டும்.

■ ■ ■ ■ ■ ■ ■ ■

# வாக்குண்டாம்

## கடவுள் வாழ்த்து

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

(பொருள்) மூல முதல்வனாய் இருக்கின்ற விநாயகக் கடவுள். அவரின் அழகிய திருவடிகளை நாள்தோறும் தவறாமல் மலர்களைக் கொண்டு அர்சித்து வணங்க வேண்டும். அவ்வாறு வணங்குபவர்க்குக் கல்வி, செல்வம், நலம் எல்லாமும் உண்டாகும்.

*(சொ-ள்.) துப்பார்-பவளம் போன்று இருக்கின்ற திருமேனி-சிவப்பான மேனியையும் துதிக்கையையும் உடைய விநாயகக் கடவுள். தப்பாமற்-தவறாமல் நாள்தோறும் பூக்கொண்டு-பூக்களைக் கொண்டு அர்சித்து சார்வார்-செய்பவர்களுக்கு வாக்குண்டாம் - சொல்வளம் பெருகும் மனமுண்டாம்-நல்ல சிந்தனை உண்டாகும் மாமலராள் - தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் இலக்குமியின் நோக்குண்டாம்- அருட் பார்வை உண்டாகும்.*

நன்றி ஒருவர்க்குச் செய்தக்கா லந்நன்றி
என்று தருங்கொ லெனவேண்டா - நின்று
தளரா வளர்தொரு தாளுண்ட நீரை
தலையாலே தான்தருத லால். 1

(பொருள்) நல்ல குணங்களைக் கொண்ட ஒருவனுக்குச் செய்யும் உதவியை ஐயுற வேண்டியதில்லை. வேரால் நீரை உறிஞ்சி தலையாலே சுவையான இளநீராய் தரும் தென்னையைப் போல அவனும் திருப்பிச் செய்வான்.

*(சொ-ள்.) ஒருவர்க்கு-ஒருவருக்கு, செய்தக்கால்-செய்தால், அந்நன்றி-அவ்வுதவியானது, நின்று-நிலை பெற்று, தளரா-சோராமல், வளர்தொரு- வளர்கிற தெங்கு-தென்னையானது, தாள் உண்ட நீரை-தன் வேரால் உண்ட நீரை, தலையாலே-தன் முடியாலே சுவையான இளநீராய், தான் தருதலால்-தான் தருவதுபோல, தருங்கொல்-எப்பொழுது செய்வானோ, என வேண்டா-என ஐயம் கொள்ள வேண்டியதில்லை.*

**நல்லா ரொருவர்க்குச் செய்த உபகாரம்**
**கல்மே லெழுத்துப்போற் காணுமே – அல்லாத**
**ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்**
**நீர்மே லெழுத்திற்கு நேர். 2**

(பொருள்) நல்ல குணங்களை மேற்கொண்டு ஒழுகி வருபவருக்குச் செய்கின்ற உதவியானது எப்போதும் கல்லின் மேல் செதுக்கிய எழுத்துக்களைப் போல அழியாமல் விளங்கும் தன்மை கொண்டதாகும். அதே சமயம் நல்ல குணங்களைக் கொண்டமையால் இருப்போர்க்கு அதாவது அன்பில்லாத நெஞ்சங் கொண்டவர்களுக்கு செய்யும் உதவியானது ஓடிக் கொண்டிருக்கும் நீரின் மேல் எழுதிய எழுத்திற்கு ஒப்பாக நிற்காமல் அழிந்துவிடும்.

*(சொ-ள்.) நல்லார் ஒருவருக்கு-நல்ல குணங்களைக் கொண்ட ஒருவனுக்கு, செய்த உபகாரம்-செய்த உதவியானது, கல்மேல் எழுத்துப்போல்-கல்லின்மேல்*

*செதுக்கப்பட்ட எழுத்துக்களைப் போல, காணுமே-அழியாமல் காணப்படும், அல்லாத-அப்படியல்லாத நல்லவர் அல்லாத, ஈரம் இலா-அன்பில்லாத குணங்களைக் கொண்டவர்க்கு, ஈந்த உபகாரம்-செய்த உதவியானது, நீர் மேல் எழுத்திற்கு-ஓடிக்கொண்டிருக்கிற நீரின் மேல் எழுதிய எழுத்திற்கு, நேர்-ஒப்பாக அழிந்துவிடும்.*

**இன்னர் இளமை வறுமைவந்த தெய்தியக்கால்**
**இன்னா அளவி லினியவும் - இன்னாத**
**நாளல்லா நாட்பூத்த நன்மலரும் போலுமே**
**ஆளில்லா மங்கைக் கழகு. 3**

(பொருள்) வறுமை வந்த காலத்தில் இளமையும் முதுமைக் காலத்தில் வந்து சேர்ந்த செல்வத்தையும் அனுபவிக்க முடியாமல் துன்பம் தருவனவாகும். எவ்வாறெனில் சூடுதற்குரிய காலமற்ற நாளில் அதாவது சூடுதற்குரிய சூழல் இல்லாத பூத்துக் குலுங்கும் நல்ல பூக்களும் கணவன் இல்லாமல் மங்கைக்கு உண்டாகும் அழகும் போலவே ஆகும்.

*(சொ-ள்.) இன்னா இளமை-துன்பத்தைத் தரும் இளமை, வறுமை வந்து எய்தியக்கால்-வறுமை வந்து விட்டதென்றால், இன்னா அளவில்-துன்பத்தைத் தரும் முதுமையில், இனியவும்-இனியவாகும் பொருள்களும், இன்னாத-துன்பத்தைத் தருவனவாகும். நாள் அல்லா நாள்-பருவமல்லா காலத்தில், பூத்த நன்மலரும்-பூத்திருக்கும் நல்ல பூக்களும், ஆளில்லா மங்கைக்கு-கணவன் இல்லாத மங்கைக்கு அழகும், போலுமே-போலவே ஒப்பாகுமே.*

**அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவளாய்**
**நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்**
**கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு**
**சுட்டாலும் வெண்மை தரும். 4**

(பொருள்) சங்கும் பாலும் இரண்டும் வெண்மை நிறத்தவை. அவை வெப்பத்திற்கு உட்படுத்தினாலும் நிறமும் தன்மையும் (பால்சுவை) மாறாதவை. அது போலவே கீழ்மக்கள் என்னதான் பழகினாலும் கீழோரே. வறுமையுற்று நிலை சரிந்தாலும் மேலோராக இருப்பவர் மேலோரேயாகும்.

*(சொ-ள்.) அட்டாலும்-நன்றாகக் காய்ச்சினாலும், பால் சுவையிற்-பால் தன் சுவையில், குன்றாது-குறையாமல் இருக்கும். அளவளவாய் நட்டாலும்-பழகி நட்புச் செய்தாலும் நண்பல்லார்-நட்புக் குணங்களைக் கொண்டிராதவர் நண்பல்லர்-ஒருபோதும் நண்பராக மாட்டார், கெட்டாலும் மேன்மக்கள்-வறுமை காரணமாக தன்நிலை சரிந்தாலும் மேலோராக விளங்குபவர் மேன் மக்களே-மேலோர்தான், சங்கு சுட்டாலும்- சங்கினைச் சுட்டுச் சுண்ணாம்பாக்கினாலும், வெண்மை தரும்-அதன் வெண்மை நிறத்தை விட்டு நீங்காது.*

**அடுத்து முயன்றாலு மாகுநா ளன்றி**
**எடுத்த கருமங்க ளாகா – தொடுத்த**
**உருவத்தால் நீண்ட உயர்மரங்க ளெல்லாம்**
**பருவத்தா லன்றிப் பழா. 5**

(பொருள்) என்னதான் முயற்சி செய்தாலும் அதற்குரிய காலமன்றி அச்செயல் நிறைவேறாது எவ்வாறெனில் உயர்ந்து கிளைத்திருக்கும் மரங்களாக இருந்தாலும் அதற்குரிய பருவம் வந்தால் ஒழிய பழுக்கும் பழங்களைத் தராது. எனவே எதனையும் அதற்குரிய காலத்தையுணர்ந்து செய்தல் வேண்டும்.

*(சொ-ள்.) அடுத்து முயன்றாலும்-என்னதான் முயற்சி செய்தாலும், ஆகும் நாளன்றி- அதற்குரிய காலத்தை விடுத்து, எடுத்த கருமங்கள் ஆகா-செய்யத் தொடங்கிய செயல்கள்*

*நிறைவேறா, தொடுத்த-கிளைத்த, உயரத்தால் நீண்ட உயர் மரங்கள்-உயரமாய் விளங்கும் உயர்ந்த மரங்கள், எல்லாமும், பருவத்தால்-அதற்குரிய காலத்தை அன்றி-தவிர்த்து, பழா-பழுத்து நிற்கா.*

**உற்ற இடத்தில் உயிர்வழங்குந் தன்மையோர்**
**பற்றலரை கண்டாற் பணிவரோ - கற்றூண்**
**பிளந்திறுவ தல்லால் பெரும்பாரந் தாங்கின்**
**தளர்ந்து வளையுமோ தான். 6**

பொருள்) தன்மீது பெரிய பாரத்தைச் சுமக்க நேரிடும் சமயத்தில் கருங்கல்லால் ஆன தூண் பிளந்து போகுமேயன்றி வளைந்துவிடாது. அதேபோன்றுதான் தனக்கு மானக்கேடு உற்ற இடத்தில் உயிரை விட்டுவிடும் தன்மையர் பற்றில்லாத பகைவரைக் கண்டால் பணிந்து போக மாட்டாத இயல்பைக் கொண்டவராவார்.

*(சொ-ள்.) உற்ற இடத்தில்-தனக்கு மானக்கேடு உண்டான விடத்தில், உயிர் வழங்குந் தன்மையோர்-உயிரைப் பொருட்படுத்தாமல் நீக்கிவிடும் தன்மையர், பற்றலரை-பற்று இல்லாதவரை, கண்டாற்-காண நேரிட்டால், பணிவரோ-பணிந்து போவாரோ, கற்றூண்-கருங்கல் ஆகிய தூண், பிளந்திறுவது அல்லாமல்-பிளந்து விரிந்து போகுமே யன்றி, பெரும்பாரந் தாங்கின்-பெரிய பாரத்தைச் சுமக்க நேரிடின், தளர்ந்து வளையுமோ தான்-அல்லாமல் வளைந்து போகாது.*

**நீரளவே யாகுமாம் நீராம்பல் தான்கற்ற**
**நூலளவே யாகுமாம் நுண்ணறிவு - மேலைத்**
**தவத்தளவே யாகுமாம் தான்பெற்ற செல்வம்**
**குலத்தளவே யாகுங் குணம். 7**

(பொருள்) நீரிலுள்ள அல்லியானது குளத்து நீர் அளவிற்கே இருக்கும். இதுபோன்றே ஒருவன் அறிவானது அவன் படித்த புத்தகங்கள் அளவும், பெற்ற செல்வம் என்பது முற்பிறவியில் செய்த தவத்தின் அளவும், குணம் என்பது அவன் குலத்தின் அளவாகவும் இருக்கும்.

*(சொ-ள்.) நீர் ஆம்பல்-நீரிலுள்ள அல்லியானது, நீர் அளவே ஆகும்-நீரினது உயரத்தின் அளவாகவே இருக்கும். (அதுபோல) நுண் அறிவு-கூரிய அறிவானது, தான் கற்ற- தான் படித்த, நூல் அளவே ஆகும்-நூல்களின் அளவே இருக்கும். தான் பெற்ற செல்வம்-தான் அடைந்த செல்வமானது, மேலை-முற்பிறப்பிற் செய்த, தவத்து அளவே-தவத்தின் அளவாகவே இருக்கும், குணம்-குணமானது, குலத்து அளவே ஆகும்- (தான் பிறந்த) குடியின் அளவாகவே இருக்கும்.*

**நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க**
**நல்லார்சொற் கேட்பதுவும் நன்றேஏ – நல்லார்**
**குணங்க ளுரைப்பதுவும் நன்றே அவரோ**
**டிணங்கி யிருப்பதுவும் நன்று.** 8

(பொருள்) ஒரு மனிதனுக்கு நல்லறிவும் நல்ல ஒழுக்கமும் உண்டாகும் வழி எதுவெனின் இக்குணங் களைப் பெற்ற நல்லவர்களைக் காண்பதும், அவரின் சொற்களைக் கேட்பதும் அவரோடு அருகில் இணங்கி யிருப்பதுவே ஆகும்.

*(சொ-ள்.) நல்லாரை-நற்குணமுடையோரை, காண்பதுவும்-பார்ப்பதும், நன்றே-நல்லதே, நல்லார்-நல்ல வருடைய, நலம் மிக்க-பயன் நிறைந்த, சொல்-சொல்லை, கேட்பதுவும்-கேட்டலும், நன்றே-நல்லதே, நல்லார்- நல்லவ ருடைய, குணங்களை-நற்குணங்களை, உரைப்பதுவும்-பேசுதலும், நன்றே-நல்லதே, அவரோடு-அந்நல்லவருடன், இணங்கி இருப்பதுவும்;-கூடியிருத்தலும், நன்று-நல்லதே.*

தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவுந் தீதே-தீயார்
குணங்க ளுரைப்பதுவுந் தீதே அவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது. 9

**(பொருள்)** முந்தைய பாடலில் குறிப்பிட்டமைக்கு எதிராகத் தீயவரைக் காண்பதும், அவர் சொல் கேட்டலும், அவரோடு நெருங்கிப் பழகுதலும் தீயறிவிற்கும் தீய ஒழுக்கத்திற்கும் அழைத்துச் சென்று தீயதாக முடிந்துவிடும்.

*(சொ-ள்.) தீயாரை-தீக்குணம் உடையவரை, காண்பதுவும்-பார்ப்பதுவும், தீதே-தீயதே, தீயார்-தீயவருடைய, திருவற்ற-பயன் இல்லாத, சொல்-சொல்லை, கேட்பதுவும்-கேட்டலும், தீதே-தீயதே, தீயார்-தீயவருடைய, குணங்கள்-தீய குணங்களை, உரைப்பதுவும்-பேசுதலும், தீதே-தீயதே, அவரோடு-அத்தீயவருடன், இணங்கி இருப்பதுவும்-கூடியிருத்தலும், தீதே-தீயதே.*

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம்-தொல்லுலகில்
நல்லா ரொருவர் உளரேல் அவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யு மழை. 10

**(பொருள்)** நெல்லுக்கு என விடுகின்ற தண்ணீரானது வாய்க்கால் வழியாக ஓடும்போது அருகே உள்ள புல்லுக்கும் கசிந்து சென்று சேரும். அதுபோலே இந்த பழமையான உலகில் நல்லவர் ஒருவர் இருந்தாலும் அவருக்காக உலகின் எல்லாருக்கும் மழை பெய்து நன்மை விளைவிக்கும்.

*(சொ-ள்.) நெல்லுக்கு-நெற்பயிருக்கு, இறைத்த நீர்-இறைக்கப்பட்ட தண்ணீரானது, வாய்க்கால் வழி ஓடி-கால்வாய் வழியாகச் சென்று, ஆங்கு-அவ்விடத்திலுள்ள, புல்லுக்கும்-புல்லுக்கும், பொசியும்-கசிந்து பரவும், (அதுபோலவே) தொல்லுலகில் -தொன்மையான இவ்வுலகில், நல்லார் ஒருவர்-நல்லவர் ஒருவர், உளரேல்-இருப்பாராயின், அவர் பொருட்டு-அவருக்காக, எல்லார்க்கும் பெய்யு மழை-எல்லார்க்கும் மழை பெய்யும்.*

பண்டு முளைப்ப தரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையாதாம் – கொண்டபேர்
ஆற்ற லுடையார்க்கும் ஆகா தளவின்றி
ஏற்ற கருமஞ் சொல். 11

**(பொருள்)** எத்தனை வல்லமை மிக்கவராக இருந்தாலும் அவர் ஒரு செயலைச் செய்து முடிக்க துணைவலி வேண்டும்.

*(சொ-ள்.) பண்டு முளைப்பது-உமி நீங்குதற்கு முன்னே முளைப்பது, அரிசியே ஆனாலும்-அரிசியே யாயினும், உமி விண்டுபோனால்-உமி நீங்கிப்போனால், முளையாது-முளைக்காது (அதுபோல) கொண்ட - பெற்ற, பேர் ஆற்றல் உடையார்க்கும்- பெரிய வல்லமையை உடையவர்க்கும், அளவு இன்றி-துணை வலியில்லாமல், ஏற்ற கருமம்-எடுத்துக்கொண்ட காரியத்தை, செயல் ஆகாது-செய்து முடித்தல் இயலாது.*

மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறிய ரென்றிருக்க வேண்டா – கடல்பெரிது
மண்ணீரு மாகா த்தனருகே சிற்றூறல்
உண்ணீரு மாகி விடும். 12

**(பொருள்)** உருவத்தில் சிறியவர் என்று ஒருவரை மதியாமல் இருக்கக்கூடாது. கடல் பெரிதென்றாலும் அதன் நீர் பயனாகாது. ஆனால் அதனருகே இருக்கும் சிறு ஊற்றுநீர் குடிப்பதற்குப் பயனாகிவிடும்.

*(சொ-ள்.) மடல்பெரிது தாழை-தாழம்பு இதழ்கள் பெரிதாயிருக்கின்றது. மகிழினிது கந்தம்-மகிழம்பூ சிறியதாக இருந்தாலும் வாசனை அதிகம், உடல் சிறியரென்றிருக்க வேண்டா-உருவத்தினால் சிறியவரென்று மதியாமல் இருக்க வேண்டா, கடல் பெரிது-கடல் பெரிதானது (என்றாலும்), மண்ணீரு மாகா-அது உடலைக் கழுவுவதற்கு உதவாது. அதனருகே சிற்றூறல்-அதன் அருகே உள்ள மண் குழியிற் ஊறும் சிறு ஊற்று நீரும், உண்ணீரு மாகி விடும்-குடிப்பதற்கு ஏற்றதாக இருக்கும்.*

**கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்**
**அவையல்ல நல்ல மரங்கள்–சபைநடுவே**
**நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய**
**மாட்டா தவன்நல் மரம். 13**

**(பொருள்)** கிளைகளோடும் கொம்புகளோடும் காட்டில் நிற்கும் மரங்கள் நல்ல மரங்கள் ஆகாது. கற்றோர் சபையின் நடுவே நிற்கும் கல்வியில்லாதவனும், பிறர் குறிப்பை உணர்ந்துகொள்ள முடியாதவனும் ஆறறிவு கொண்டிருந்தாலும் அவன் அந்த மரத்திற்கே சமம். அவனே நல்ல மரமும் ஆவான்.

*சொ-ள்.) கவையாகி-கிளைகளை உடையனவாகி, கொம்பு ஆகி-கொம்புகளை உடையனவாகியும்-காட்டு அகத்து நிற்கும்-காட்டினிலுள்ள நிற்கின்ற, அவை-அந்த மரங்கள், நல்ல மரங்கள் அல்ல-நல்ல மரங்கள் ஆகாது, சபை நடுவே-கற்றோர் இருக்கும் சபையின் நடுவே, நீட்டோலை-நீட்டிய ஓலையை, வாசியா நின்றான்-வாசிக்கமாட்டாமல்*

*நின்றவனும், குறிப்பறிய மாட்டாதவன்-பிறர் குறிப்பை அறியமாட்டாதவனுமே, நல்மரம்-நல்ல மரங்களாகும்.*

**கான மயிலாட கண்டிருந்த வான்கோழி**
**தானு மதுவாகப் பாவித்துத் – தானுந்தன்**
**பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே**
**கல்லாதான் கற்ற கவி. 14**

**(பொருள்)** காட்டிலுள்ள அழகான மயில் தனது தோகைதனை விரித்து ஆடியதைப் பார்த்துக் கொண்டிருந்த வான்கோழியானது தன்னையும் அம் மயிலாக எண்ணிக்கொண்டு தன்னுடைய சிறகை விரித்து ஆடினால் எவ்வளவு பொருத்தமற்றதோ அந்தளவு கல்வி கற்காதவன் ஒரு கவியை மட்டும் கற்றுக்கொண்டு செல்வது என்பதற்கு ஒப்பாகும்.

***(சொ-ள்.)*** *கான மயிலாட-காட்டு மயிலாட, கண்டிருந்த வான்கோழி-அதைப் பார்த்துக்கொண்டிருந்த வான்கோழியானது-தானு மதுவாகப் பாவித்து-தன்னையும் மயிலாகவே நினைத்துக்கொண்டு, தானுந்தன் பொல்லாச் சிறகை விரித்தாடினாற்றேபோலுமே-தானும் தனது அழகில்லாத சிறகை விரித்து ஆடியது போல, கல்லதாதான் கற்ற கல்வி-கற்க வேண்டியவைகளை (முறைப்படக்) கல்லாதவன் ஒரு கவியைக் கற்றுக்கொண்டு செல்வதைப் போல.*

**வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி**
**ஆங்கதனுக் காகார மானாற்போல – பாங்கறியாப்**
**புல்லறி வாளர்க்குச் செய்த உபகாரங்**
**கல்லின்மே லிட்ட கலம். 15**

**(பொருள்)** விடநோயைக் கொண்ட வேங்கைப் புலிக்கு அந்நோயைத் தீர்த்த வைத்தியன் அப்புலிக்கே

இரையாவது எவ்வாறென்றால் அற்ப அறிவினர்க்கு செய்யும் உதவியானது கல்லின்மேல் போடப்பட்ட மட்கலம்போல அழிந்து துன்பத்தை விளைவிப்பது போல துன்பம் நேரும்.

*சொ-ள்.) வேங்கை வரிப்புலிநோய்-வரிகளையுடைய புலியின் விடநோயை, தீர்த்த-போக்கிய, விடகாரி-விட வைத்தியன், ஆங்கு-அப்பொழுதே, ஆங்கதனுக்கு ஆகார மானாற்போல-அப்புலிக்கு இரையானாற்போல, பாங் கறியாப்-நன்றியறிவில்லாத, புல்லறிவாளர்க்கு-அற்ப அறிவினர்க்கு, செய்த உபகாரம்-செய்யும் உதவியானது, கல்லின்மேலிட்ட கலம்-கல்லின்மேல் போடப்பட்ட மட்கலம் போல அழிந்து செய்தவனுக்கே துன்பத்தை விளைவிக்கும்.*

**அடக்க முடையா ரறிவிலரென் றெண்ணிக்**
**கடக்கக் கருதவும் வேண்டா - மடைத்தலையில்**
**ஓடுமி னோட உறுமீன் வருமளவும்**
**வாடி யிருக்குமாங் கொக்கு. 16**

**(பொருள்)** நீர் நிறைந்துவிடத்து துள்ளியோடிக கொண்டிருக்கும் சிறு மீன்களை விடுத்து தனக்குரிய இரையாகப் பெரிய மீன்கள் வரும் வரையில் காத்திருக்கும், கொக்கைப் போலவே தனக்குரிய பகைவர்கள் வரும்வரை காத்திருப்பவரை அறிவில் லாதவர் என்று நினைத்துவிடக் கூடாது. அது கேடு விளைவித்துவிடும் நினைப்போருக்கு.

***(சொ-ள்.)*** *அடக்கமுடையார்-தக்க பகைவர் வரும் வரை காத்திருப்பவரை, அறிவு இலர் என்று எண்ணி-அறிவில்லாதவர் என்றெண்ணி, கடக்க-அவரை வெல்லுதற்கு, கருதவும் வேண்டா-நினைக்கவும் வேண்டியதில்லை, மடைத்தலையில்-நீர் மடையினிடத்து, கொக்கு- கொக்*

*கானது, ஓடுமீன் ஓட-சிறுமீன்கள் ஓடிக்கொண்டிருக்க, உறுமீன் வருமளவுக்கு-இரையாவதற்கேற்ற பெரிய மீன்கள் வரும்வரை, வாடியிருக்கும்-அடங்கியிருக்கும் என்பதாம்.*

**அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்**
**உற்றுழித் தீர்வார் உறவல்லர்–அக்குளத்திற்**
**கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே**
**ஒட்டிய யுறுவார் உறவு. 17**

***(பொருள்)*** உறவினர் என்பது வறுமை வந்த காலத்து நீர் வற்றிப்போன குளத்திலிருந்து நீங்கிச்செல்லும் நீர்ப்பறவை போல விட்டுச் செல்வதல்ல. அக் குளத்திலேயே ஒட்டியிருக்கும் கொட்டி, அல்லி, நெய்தல் மலர்களைப் போல நீங்காது அவ்வறுமையின் வருத்தத்தை அவரோடு அனுபவித்து உடனிருத்தலாகும்.

*(சொ-ள்.) அற்ற குளத்தின்-நீர்வற்றிய குளத்தி னின்றும், அறுநீர்ப் பறவைப்போல்-நீங்குகின்ற நீர்ப்பறவை போல, உற்றுழி-வறுமை வந்தபொழுது, தீர்வார்-நீங்குவோர், உறவல்லர்-உறவினர் ஆகார். அக்குளத்தில்-அந்தக் குளத்தில், கொட்டியும், ஆம்பலும் நெய்தலும் போலவே-கொட்டியும் அல்லியும் நெய்தலும் போல, ஒட்டி உறுவார்-நீங்காது சேர்ந்திருந்து வருத்தத்தை அனுபவிப்போரே, உறவு-உறவினராவர்.*

**சீரியர் கெட்டாலும் சீரியரே சீரியர்மற்**
**றல்லாதார் கெட்டாலுங் கென்னாகும் – சீரிய**
**பொன்னின் குடமுடைந்தாற் பொன்னாகு மென்னா**
**மண்ணின் குடமுடைந்தக் கால். 18**

***(பொருள்)*** மேன் மக்களாயிருப்போர் வறுமை வந்த காலத்தும் தம் நிலையிலிருந்து கெடமாட்டார் மேன் மக்களாகவே இருப்பர். கீழ் மக்கள் அவ்வாறு இருக்க

மாட்டார். இது எவ்வாறெனின் பொன்குடம் உடைந்தாலும் பொன் குடமாகவே இருந்து பயன் அளிக்கும் மாறாக மண் குடம் உடைந்தால் எவ்விதப் பயனும் தராது என்பதாம்.

*(சொ-ள்.) சீரியர் கெட்டாலும்-மேண்மக்கள் வறுமையுற்றுக் கெட்டாலும், மேண்மக்களே, சீரியர் அல்லாதார் கெட்டால்-கீழ் மக்கள் வறுமையுற்றால், அங்கு என்னாகும்-அப்பொழுதே அவரின் குணம் யாதாகும், சீரிய பொன்னின் குடம் உடைந்தால்-சிறந்த பொன்னால் ஆகிய குடம் உடைந்தாலும், பொன் ஆகும்-பழைய பொன்னேயாகிப் பயன்தரும், மண்ணின் குடம் உடைந்தக்கால்-மண்ணாலாகிய குடம் உடைந்தால், என் ஆகும்-அது யாது பயனுடையதாம்.*

**ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்**
**நாழி முகவாது நால்நாழி – தோழி**
**நிதியுங் கணவனும் நேர்படினும் தத்தம்**
**விதியின் பயனே பயன். 19**

**(பொருள்)** ஆழமான கடலில் நீரை ஒரு படி கொண்டு அழுந்தும்படி அமிழ்த்தினாலும் அது ஒரு படியளவு அன்றி நான்குபடி நீரை கொள்ளாது அது போலவே நல்ல பொருளும், கணவனும் ஒரு பெண்டிர்க்குக் கிடைத்தாலும் அது விதி விதித்தபடியே அனுபவிக்கும் பயனைத் தரும்.

*(சொ-ள்.) ஆழ அமுக்கி முகத்தினும்-அழுந்தும்படியாக அமிழ்த்தி மொண்டாலும், ஆழ்கடல் நீர்-ஆழமாகிய கடலின் நீரை, நாழி-ஒரு படியானது, நால் நாழி முகவாது-நான்குபடி நீரை மொள்ளாது, (அதுபோல) தோழி-தோழியே, நிதியும் கணவனும் நேர்ப்படினும்-மிக்கப் பொருளும் தக்க நாயகனும் கிடைத்தாலும், தம்தம்-அவரவருடைய, விதியன்*

*பயனே பயன்-ஊழினளவாகிய பயனே (அனுபவிக்கப்படும்) பயனாகும்.*

**உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா**
**உடன்பிறந்தே கொல்லும் வியாதி – உடன்பிறவா**
**மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கும்**
**அம்மருந்து போல்வாரு முண்டு. 20**

**(பொருள்)** உடன் பிறந்தவர்கள் எல்லோரும் சுற்றத்தவர்கள் உதவுவார்கள் என்று நம்ப வேண்டிய தில்லை. ஏனென்றால் உடம்புடன் பிறந்து கொல்லும் நோயைப் போன்றும் துன்பம் செய்வார்கள். அதுபோல நோய்க்கான மருந்து பெரிய மலையிலுள்ள மருந்தாகும். அது நமக்குத் தொடர்பிலலை என்றாலும் உதவும். எனவே அயலாரில் உதவுவோரும் உண்டு என்பதாம். உடன் பிறந்தோரில் உதவாதவரும் உண்டு என்பதாம்.

***(சொ-ள்.)*** *உடன்பிறந்தார்-உடன் பிறந்தவர் எல்லோரும், சுற்றத்தார் என்றிருக்க வேண்டா-நன்மை செய்யும் சுற்றத்தார் என்று கருதியிருக்க வேண்டியதில்லை. உடன் பிறந்தே கொல்லும்-உடம்புடன் பிறந்தே கொல்லும், வியாதி-நோயானது, உடன் பிறவா-உடன் பிறவாத, மாமலையில் உள்ள மருந்தே, பெரிய மலையில் இருக்கும் மருந்தே, பிணி தீர்க்கும்-நோயைப் போக்கும், அம்மருந்து போல்வாரும் உண்டு-அம்மருந்து போல் (அயலாராக யிருந்தும்) உதவி செய்வாரும் சிலர் உண்டு.*

**இல்லா ளகத்திருக்க இல்லாத தொன்றில்லை**
**இல்லாளும் இல்லாளே யாமாயின் – இல்லாள்**
**வலிகிடந்த மாற்ற முரைக்குமேல் அவ்வில்**
**புலிகிடந்த தூறாய் விடும். 21**

**(பொருள்)** மனையாள் என்பவள் நற்குணங் களோடு இருக்க வேண்டும். இத்தகைய நற்குணங்க ளோடு அமைந்த மனையாள் இருக்கும் வீடே எல்லாப் பொருளும் நிறைந்த வீடாகும். அப்படியில்லாத வீடு புலி தங்கியுள்ள புதருக்குச் சமமாகும். அதாவது வீடாகாது காடேயாகும்.

*(சொ-ள்.) இல்லாள் அகத்து இருக்க-(நற்குண நற்செய்கைகளையுடைய) மனையாள் வீட்டில் இருக்கின், இல்லாதது ஒன்று இல்லை-(அவ்வீட்டில்) இல்லாத பொருள் ஒன்றுமில்லை. இல்லாளும் இல்லாளே ஆயின்-மனையாள் இல்லாமற் போயினும், இல்லாள் வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல்-மனையாள் கடுமை பொருந்திய சொற்களைச் சொல்லினும், அவ்வில் புலிகிடந்த தூறு ஆய்விடும்-அவ்வீடு புலி தங்கிய புதர் போல் ஆய்விடும்.*

**எழுதியவா றேகாண் இரங்குமட நெஞ்சே**
**கருதியவா றாமோ கருமம்-கருதிப்போய்க்**
**கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்கா யீந்த**
**முற்பவத்திற் செய்த வினை. 22**

**(பொருள்)** கற்ப மரத்தைத் தேடிப்போனவருக்கு எட்டிக்காய் கிடைத்தது எனில் வேறொன்றுமில்லை. அது அவரவர் விதிப்பயனே. எனவே ஒருவர் செய்யும் செய் தொழில்கள் விதிக்கப்பட்ட விதிப்படியே அமையுமே யொழிய அவரவர் நினைத்தபடி அமையாது என்பதாம்.

*(சொ-ள்.) இரங்கும் மடம் நெஞ்சே-வருந்துகின்ற அறியாமை பொருந்திய மனமே, கருதிப் போய்க் கற்பகத்தைச் சேர்ந்தோர்க்கு-(நல்ல பயனைப் பெறலா மென்று) நினைத்துப் போய்க் கற்பகத் தருவை அடைந்தவர்க்கு, காஞ்சிரங்காய் ஈந்ததேல்-எட்டிக்காயைக் கொடுத்ததாயின், முற்பருவத்தில் செயத வினை-(அதற்குக்*

*காரணம் அவர்) முற்பிறப்பிற் செய்த தீவினையாகும். கருமம் கருதியவாறு ஆமோ-செய்தொழில்கள் (நீ) நினைத்தபடியே ஆகுமோ எழுதியவாறே காண்-(கடவுள்) விதித்தபடியே ஆகும் என்று அறிவாயாக.*

**கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்**
**பொற்பிளவோ டொப்பாரும் போல்வரே - விற்பிடித்**
**நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே**
**சீரொழுகு சான்றோர் சினம். 23**

**(பொருள்)** கீழோர் கோபத்தினால் மாறுபட்ட விடத்து கல்லின் மேற்பட்ட பிளவுபோல கூடமாட்டார். இடைக்குணம் கொண்டோர் யாரேனும் ஒருவர் கூட்டச் சேருவர். நல்லவர்களே நீர்மேல் எய்த பிளவுபோல உடனே அப்போதே சேர்ந்துவிடுவர்.

*(சொ-ள்.) கற்பிளவோடு ஒப்பர்-கல்லின் பிளவோடு திரும்பக்கூடார். கயவர்-கீழோர், கடுஞ்சினத்து-கடுஞ்சினத் தால், வேறுபட்டால், பொன்பிளவோடு ஒப்பாரும் போல்வார்-(அப்படி வேறுபட்டபோது பொன்னின் பிளவோடு ஒப்பாவாரும் ஒப்பாவர். (ஒருவர் கூட்டக் கூடுவர்) சீர் ஒழுகு சான்றோர் சினம்-சிறப்பு மிக்கப் பெரியோருடைய கோபம், வில்பிடித்து நீர்கிழிய எய்த வடுப்போல மாறும்-வில்லைப் பிடித்து நீர் பிளக்க எய்த பிளவுபோல நீங்கும்.*

**நற்றா மரைக்கயத்தில் நல்லன்னஞ் சேர்ந்தாற்போல்**
**கற்றாரைக் கற்றாரே காமுறுவர் - கற்பிலா**
**மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டிற்**
**காக்கை உகக்கும் பிணம். 24**

**(பொருள்)** நல்ல தாமரை மலர்கள் மலர்ந்துள்ள குளத்தில் நல்ல அன்னப்பறவை சென்று சேர்வதைப் போல கல்வி கற்றவரைக் கல்வி கற்றவர்களே விரும்புவர்.

சுடுகாட்டில் காக்கை பிணத்தை விரும்புவதுபோல கல்வி அறிவில்லாத மூடர்களை மூடர்களே விரும்புவர்.

*(சொ-ள்.) நற்றாமரைக் கயத்தில்-நல்ல தாமரைப் பூவை உடைய குளத்தில், நல்லன்னம் சேர்ந்தாற்போல்-நல்ல அன்னப்பறவை சேர்ந்தாற்போல, கற்றாரைக் கற்றாரே காமுறுவர்-கல்வியுடையோரைக் கல்வியுடையோரே விரும்பிச் சேர்வர், கற்பிலா மூர்க்கரை-கல்வியில்லாத மூடரை, மூர்க்கர்-மூடரே, முகப்பர்- விரும்புவர், முதுகாட்டில்-சுடுகாட்டில் உள்ள, காக்கை உக்கும் பிணம்-பிணத்தைக் காக்கை விரும்புவதுபோல.*

நஞ்சுடைமை தானறிந்து நாகங் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு – நெஞ்சிற்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
காவிலா நெஞ்சத் தவர். 25

(பொருள்) நெஞ்சில் வஞ்சனையுடையவர் நாகப்பாம்பு விடமுடையதால் மறைந்து, வாழ்வதைப் போல தம்மை மறைத்துக் கொண்டிருப்பர். நெஞ்சில் வஞ்சனையில்லாதவர்கள் விடமில்லாத தண்ணீர்ப் பாம்பு அச்சமில்லாமல் வெளியில் கிடப்பதைப் போல தம் மனத்தை மறைத்துக்கொள்ளாமல் வாழ்வர்.

*(சொ-ள்.) நஞ்சுடைமை தானறிந்து - தான் விடம் உடையதாயிருத்தலை, அறிந்து, நாகம் கரந்துறையும்- நாகப் பாம்பானது மறைந்து வசிக்கும்., அஞ்சாப் புறங்கிடக்கும்-அஞ்சாமல் வெளியே கிடக்கும், நீர்ப்பாம்பு-தண்ணீர்ப் பாம்பு, நெஞ்சிற் கரவுடையார்-மனத்தில் வஞ்சனையுடையவர், தம்மைக் கரப்பர்-தம்மைத் தாமே மறைத்துக் கொள்வர், கரவுஇலா நெஞ்சத்தவர்-வஞ்சையில்லாத மனத்தையுடையவர் கரவார்-தம்மை மறைத்துக்கொள்ளார்.*

**மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றஇட மெல்லாம் சிறப்பு. 26**

**(பொருள்)** அரசனையும் கசடறக் கற்ற புலவனையும் ஒப்பிட்டு ஆராய்ந்தால் புலவனே அரசனைக் காட்டிலும் சிறந்தவன். எவ்வாறென்றால் அரசனுக்குத் தன் நாட்டில் மட்டுமே சிறப்பு. கற்றவனுக்கு அவன் செல்லும் நாடெல்லாம் சிறப்பு உண்டாகும்.

*(சொ-ள்.) மன்னனும்-அரசனையும், மாசறக் கற்றோனும்-கசடறக் கற்ற புலவனையும், சீர்தூக்கி-ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்தால், மன்னனின் கற்றோன் சிறப்புடையன்-அரசனைவிடப் புலவனே சிறப்புடையவனானவான், மன்னற்கு-அரசனுக்கு, தன் தேசமல்லாற்-தன் நாட்டில் அல்லாமல், சிறப்பு இல்லை-பிற நாடுகளில் சிறப்பு இல்லை., கற்றோர்க்கு-கல்வி கற்றறோருக்கு, சென்ற இடமெல்லாம் சிறப்பு-எல்லா நாடுகளிலும் சிறப்பு உண்டாகும்.*

**கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்
அல்லாத மாந்தர்க்கு கறங்கூற்றம் - மெல்லிய
வாழைக்குத் தானின்ற காய்கூற்றங் கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண். 27**

**(பொருள்)** கல்லாதவர்களுக்கு கற்றவர்களின் சொல் துன்பம் தரும். மெல்லிய வாழை மரத்திற்கு அது ஈன்ற காய் துன்பம் தரும். அதுபோலவே இல்வாழ்க் கைக்குப் பொருந்தி நடவாத மனைவி அவள் கணவனுக்குத் துன்பம் தருவாள்.

*(சொ-ள்.) கல்லாத மாந்தர்க்கு-கல்வியறிவில்லாத மாக்களுக்கு, கற்றுணர்ந்தார் சொல்-கற்றறிந்தவருடைய உறுதிமொழி கூற்றம்-இயமனாம் (துன்பம் செய்யுமாம்) அல்லாத மாந்தர்க்கு-அல்லாத மனிதர்க்கு, அறம்-தருமம், கூற்றம்-இயமனாம், மெல்லிய வாழைக்கு-மெல்லிய வாழை மரத்துக்கு, தான் ஈன்ற காய் கூற்றம்-அஃது ஈன்ற காயே இயமனாம், இல்லிற் இசைந்து ஒழுகாப் பெண்-இல்வாழ்க் கைக்குப் பொருந்தி நடவாத மனைவி, கூற்றம்-கணவனுக்கு இயமனாம்.*

**சந்தன மென்குறடு தான்தேய்ந்த காலத்துங்**
**கந்தங் குறைபடா தாதலால் - தந்தந்**
**தனஞ்சிறிய ராயினுந் தார்வேந்தர் கேட்டால்**
**மனஞ்சிறிய ராவரோ மற்று. 28**

***(பொருள்)*** சந்தனம் எவ்வளவு தேயந்தாலும் அதன் மணம் போகாதிருக்கும். அதுபோலவே தன்னுடைய செல்வத்தில் எவ்வளவு குறைந்தாலும் மாலையணிந்த அரசர்கள் தங்கள் மனவிரிவில் ஒரு சிறிதும் சுருங்கியவர் ஆகமாட்டார்.கேட்டால் கொடுப்பார்கள்.

*(சொ-ள்.) சந்தன மென்குறடு -மிருதுவாகிய சந்தனக் கட்டையானது, தான் தேய்ந்த காலத்துங்-தான் தேய்ந்து போன காலத்திலும், கந்தங் குறைபடாதாதலால்-தன்னுடைய மணம் குறையாது ஆதலால் தம்தம் தனம் சிறியராயினும்-தங்கள் தங்கள் செல்வத்திற்குக் குறைந்தவரானாலும், தார்வேந்தர்-மாலை அணிந்த அரசர், மனஞ்சிறியவர் ஆவரோ-மனம் சுருங்கினவர் ஆவாரோ மாட்டார்.*

**மருவிய சுற்றமும் வான்பொருளும் நல்ல**
**உருவும் உயர்குலமு மெல்லாம் - திருமடந்தை**
**ஆம்போ தவளோடு மாகும் அவள்பிரிந்து**
**போம்போ தவளொடு போம். 29**

**(பொருள்)** இனிய உறவு, மேலாகிய பொருள், நல்ல அழகு, உயர்வாகிய குலம் எல்லாமும் நிலையற்றவை. நீங்கிவிடும். எவ்வாறெனில் சீதேவி வந்து சேரும்போது வரும் செல்வம் அவள் போகும்போது நீங்கிச் செல்வதைப் போலவே.

*(சொ-ள்.) மருவிய சுற்றமும-இனிய உறவும், வான் பொருளும்-மேலாகிய பொருளும், நல்ல உருவும்-நல்ல அழகும், உயர்குலமும் எல்லாம்-உயர்வாகிய குலமும் என்னும் இவைகளெல்லாம், திருமடந்தை ஆம்போது-சீதேவி வந்து கூடும்போது, அவளோடும் ஆகும்-அவளுடனே வந்து கூடும். அவள் பிரிந்துபோம்போது-அவள் நீங்கிப் போகும்பொழுது, அவளொடு 'போம்-அவளுடனே நீங்கிப்போகும்.*

**சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாமவரை**
**ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர்-மாந்தர்**
**குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து**
**மறைக்குமாங் கண்டீர் மரம்.** 30

**(பொருள்)** தம்மை வெட்டுவோருக்கும் குளிர்ச்சியான நிழலைத் தந்து வெயிலை மறைக்கும் மரத்தின் இயல்பைப்போல அறிவுடையோர் அவருக்குச் சாகும்வரை பிறர் தீங்கு செய்தாலும் அவரையும் தம்மாலே ஆகுமளவுக்குக் காப்பர்.

*(சொ-ள்.) சாந்தனையும்-தாம் இறந்துபோகுமளவும், தீயனவே செய்திடினும் பிறர் தமக்குத் தீங்குகளையே செய்தாராயினும், தாம் அவரை ஆந்தனையும் காப்பர்-தாம் அவரையும் தம்மாலே ஆகுமளவும் காப்பார் அறிவுடையோர், மாந்தர் குறைக்கும் தனையும்-தம்மை மனிதர் வெட்டுமளவும், குளிர்நிழலைத் தந்து-அவருக்கும் குளிர்ச்சியாகிய நிழலைத் தந்து வெயிலை மறைக்கும், மரம்-மரங்களானவை போலவே.*

**வாக்குண்டாம் மூலமும் உரையும் முற்றும்.**

# நல்வழி

## கடவுள் வாழ்த்து

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன் – கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்து தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா.

**(பொருள்)** தூய மாணிக்கம் போன்ற விநாயகக் கடவுளே, யானை முகத்தையுடையவனே பசுவின் பாலும் தெளிதேனும், வெல்லப்பாகும், பருப்பும் ஆகிய நான்கையும் கலந்து உனக்குத் தருகிறேன். அடியேனுக்கு நீ சங்கத்தமிழ் மூன்றிலும் புலமையைப் பெற அருள்வாயாக.

**(சொ-ள்.)** *பாலுந் தெளிதேனும் பாகும் பருப்பும்-பசுவின்பால், தெளிந்த தேன், வெல்லப் பாகு, பருப்பு-கோலஞ்செய்-அழகினைச் செய்கின்ற, துங்க கரிமுகத்து-உயர்ந்த யானை முகத்தையுடைய விநாயகக் கடவுளே, சங்கத்தமிழ்-இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் மூன்றையும் தா - தந்து அருள்வாயாக.*

புண்ணிம்ஆம் பாவம்போம் போனநாட் செய்தஅவை
மண்ணில் பிறந்தார்க்கு வைத்தபொருள்–
எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை எச்சமயத் தோர்சொல்லுந்
தீதொழிய நன்மை செயல். 1

**(பொருள்)** அறத்தால் இன்பம் உண்டாகும். பாவமானது துன்பத்தை உண்டாக்கும். முற்பிறவியில் செய்த பாவ, புண்ணிய அடிப்படையில்தான் இப்

பிறவியில் இன்ப, துன்பங்களை அனுபவிக்க நேரிடும். எனவே ஆராய்ந்து பார்த்தால் இதனைத்தான் எல்லாச் சமயத்தாரும் கூறியுள்ளமையால் பாவத்தை நீக்கிய புண்ணிய செயலைச் செய்வது நலமாகும்.

*(சொ-ள்.) புண்ணியம் ஆம்-அறம் நன்மை செய்யும், பாவம் போம்-பாவமானது அழிவினைச் செய்யும், போன நாள் செய்த அவை-முற்பிறப்பில் செய்த பாவ, புண்ணியங்கள், மண்ணில் பிறந்தார்க்கு-பூமியில் பிறந் தார்க்கு, வைத்தபொருள்-இன்ப, துன்பங்களை அனுபவிக்க வைத்த பொருள், எண்ணுங்கால்-ஆராய்ந்து பார்த்தால், ஈதொழிய வேறில்லை-இதுவன்றி வேறில்லை, எச்சமயத்தோர் சொல்லும்-எந்த மதத்தினரும் சொல்லுவதும், தீது ஒழிய நன்மை செயல்-பாவம் நீக்கிப் புண்ணியம் செய்க.*

**சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்**
**நீதி வழுவா நெறிமுறையின் – மேதினில்**
**இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்**
**பட்டாங்கில் உள்ளபடி. 2**

**(பொருள்)** சாதி இரண்டு என்பதைத் தவிர வேறிலலை. உண்மையாக எண்ணிப் பார்த்தால் நீதி வழுவாமல் நெறியிமுறையில் வறியவர்க்குக் கொடுத்து உதவுபவர் உயர்ந்தவர் அவ்வாறு உதவாதவர் இழி குலத்தோர் ஆவர். இதுதான் உண்மை நூலில் கூறிய சாதியாகும்.

*(சொ-ள்.) சாதி இரண்டொழிய வேறில்லை-இரண்டு சாதி தவிர வேறில்லை. சாற்றுங்கால்-சொல்லுமிடத்து, நீதி வழுவா நெறிமுறையின்-நீதி தவறாத நல்வழியில் நின்று, மேதினியில்-பூமியில், இட்டார் பெரியோர் இடாதார் இழி குலத்தோர்-வறியவர்க்கு ஈவர் பெரியோர், அவ்வாறு செய்யாதோர் இழிந்தவர், பட்டாங்கில் உள்ளபடி-உண்மை.*

**இடும்பைக்கு இடும்பை இயலுடம்பி தன்றே**
**இடும்பொய்மை மெய்யென் றிராதே - இடுங்கடுக**
**உண்டாயி னுண்டாகும் ஊழிற் பெருவலிநோய்**
**விண்டாரைக் கொண்டாடும் வீடு. 3**

**(பொருள்)** இந்த உடலின் தன்மை துனபம் என்ற பொருளைச் சேமித்து வைக்கும் கலனாகும். இவ்வுடல் எளிதில் அழியக்கூடியது. அதனால்தான் மெய் என்றார்கள். எனவே காலத்தில் வறியவர்களுக்கு உதவுங்கள். இத்தகைய ஈகைத்தன்மையால் ஊழின் பெருவலிநோயாக உள்ள பாசத்திலிருந்து விடுபட்டு எல்லோரும் கொண்டாடும் வீடுபேற்றையடையலாம்.

*(சொ-ள்.) இடும்பைக்கு இடும்பை-துன்பத்தை இட்டு வைக்கும் பை, இயலுடம்பி தன்றே-பொருந்திய இவ்வுடம்பானது. இடும்பொய்யை மெய்யென்றிராதே-உணவை இடுகின்ற இவ்வுடம்பை மெய்யென்று எண்ணாமல், இடுங்கடுக-விரைவில் இடுக, உண்டாயி னுண்டாகும் ஊழிற் பெருவலிநோய்-இவ்வறம் உண்டாயின் மிக்க வலிமையுடைய பாசமெனும் நோயிலிருந்து விண்டாரைக் கொண்டாடும் வீடு-அவ்வாறு நீங்கியவரை விரும்புகின்ற வீடுபேறு கிடைக்கும்.*

**எண்ணிய ஒருகருமம் யார்க்குஞ்செய் யொண்ணாது**
**புண்ணியம் வந்தெய்து போதல்லாற் - கண்ணில்லான்**
**மாங்காய் விழவெறிந்த மாத்திரைக்கோ லொக்குமே**
**ஆங்கால மாகு மவர்க்கு. 4**

**(பொருள்)** எண்ணிய ஒரு செயலை யாரும் உடனடியாகச் செய்துவிட முடியாது. முற்பிறவியில் செய்த நற்பயனின் விளைவு இருந்தால்தான் அவ்வாறு செய்ய இயலும். அவ்வாறில்லாமல் செய்தால் கண்

தெரியாத குருடன் மாங்காய் வேண்டி வீசியெறிந்த கோலைப் போன்றதாகும். மாங்காயும் கோலும் இழக்க நேரிடும். எனவே நல்வினை வந்து சேருங்காலத்து அவர்க்குரிய செயலும் நிறைவேறும்.

*(சொ-ள்.) எண்ணி ஒரு கர்மம்-ஒரு காரியத்தை எண்ணி, யார்க்குஞ்செய் யொண்ணாது-யாருக்கும் செய்ய நினைக்காமல், புண்ணியம் வந்தெய்து போதல்லாற்-புண்ணியம் வந்த கூடும்போதெல்லாம், கண்ணில்லான்-கண்ணில்லாத குருடன், மாங்காய் விழவெறிந்த-மாங்காய் விழுவதற்காக எறிந்த, மாத்திரைக்கோ லோக்குமே-மாத்திரைக் கோலை ஒக்கும், ஆங்கால மாகு மவர்க்கு-புண்ணியம் வரும்போது அந்தக் காலம் அவர்க்கு அக்காரியம் எளிதில் முடியும்.*

**வருந்தி அழைத்தாலும் வாராத வாரா**
**பொருந்துவன போஷிமென்றாற் போகா-இருந்தேங்கி**
**நெஞ்சம்புண் ணாக நெடுந்தூரத் தாம்நினைந்து**
**துஞ்சுவதே மாந்தர் தொழில். 5**

**(பொருள்)** வருந்தி வருந்தி அழைத்தாலும் ஊழ்வினையின் காரணமாக வரக்கூடாதவை என்றும் வராது. அதுபோன்றே ஊழின் காரணமாக வந்து கூடுவனவற்றையும் வெறுத்துத் தள்ளினாலும் அது விட்டுப் போகாது. இந்த உண்மையை என்றும் அறியாமல்தான் வாழ்ந்து இறந்துபோவதே மாந்தர்களின் இயல்பாக உள்ளது.

*(சொ-ள்.) வருந்தி அழைத்தாலும் வாராத வாரா-வருந்தி அழைத்தாலும் வாராதது வாராது, பொருந்துவன போமினென்றாற் போகா-வரக்கூடியவை போ என்றாலும் போகாது, இருந்தேங்கி-இருந்து ஏக்கமுற்று, நெஞ்சம் புண்ணாக நெடுந்தூர தாம் நினைந்து-நெடுந்தூரம் சிந்தித்து, துஞ்சுவதே மாந்தர் தொழில்-மாண்டுபோவதே மனித இயல்பு.*

**உள்ள தொழிய ஒருவர்க் கொருவர்சுகங்**
**கொள்ளக் கிடையா குவலயத்தில் - வெள்ளக்**
**கடலோடி மீண்டு கரையேறி னாலென்**
**உடலோடு வாழும் உயிர்க்கு. 6**

**(பொருள்)** ஊழ்வினையின் அளவே ஒருவருக்கு ஒருவர் சுகம் கிட்டும். அன்றி அளவு கடந்தோ அல்லது வேறொருவரின் சுகத்தையோ அனுபவிக்கமுடியாது. வெள்ளம்போல் நீர் நிரம்பியுள்ள கடலில் சென்று செல்வத்தை ஈட்டி வந்தாலும் அது ஊழ்வினையின் அளவிற்கேற்பவே அனுபவிக்க வைக்கும்.

*(சொ-ள்.) உள்ள தொழிய ஒருவர்க்குக்-ஒருவருக்கு உள்ளது தவிர, கொருவர்சுகங்-மற்றொருவருடைய சுகம், கொள்ளக் கிடையா குவலயத்தில்-அனுபவிக்க விரும்பினால் கிடைக்காது. வெள்ளக் கடலோடி மீண்டு-வெள்ளம் நிரம்பிய கடலில் சென்று செல்வம் சேர்த்து-கரையேறி னாலென்-திரும்பி வந்தாலும், உடலோடு வாழும் உயிர்க்கு-உடலோடு வாழும் உயிர்க்கு எந்தப் பயனும் இல்லை.*

**எல்லாப் படியாலும் எண்ணினால் இவ்வுடம்பு**
**பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை - நல்லார்**
**அறிந்திருப்பார் ஆதலினால் ஆங்கமல நீர்போற்**
**பிறிந்திருப்பார் பேசார் பிறர்க்கு. 7**

**(பொருள்)** எந்த நிலையில் நின்று எண்ணிப் பார்த்தாலும் இவ்வுடம்பு கேடு விளைவிக்கும் புழுக் களுக்கும் பிணிகளுக்கும் பாத்திரமான இருப்பிடம் போன்றது. எனவே இவ்வுண்மையை நல்லார் அறிந்திருப்பதால் தாமரை நீர் போல இவ்வுடம்புடன் பிறந்திருந்தாலும் அவர்கள் உடம்பின்மேல் பற்றற்று இருப்பார்கள்.

*(சொ-ள்.) எல்லாப் படியாலும்-எல்லா வகையாலும், எணணினால் இவ்வுடம்பு-எண்ணினால் இந்த உடம்பு, பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை-புழுக்களுக்கும் நோய்களுக்கும் குடியாக இருக்கிற உடம்பானது, நல்லார் அறிந்திருப்பார்-நல்லவர்கள் தெரிந்து வைத்திருப்பார்கள். ஆதலினால் ஆங்கமல நீர்போற்-ஆகவே பெரியோர்கள் தாமரை இலை நீர்போல, பிறிந்திருப்பார் பேசார் பிறர்க்கு-உடம்போடு கூடியும் கூடாதிருப்பார்கள், பிறரிடத்துப் பேசமாட்டார்கள்.*

**ஈட்டும் பொருண்முயற்சி எண்ணிறந்த வாயினும்ஊழ்**
**கூட்டும் படியன்றிக் கூடவாம் – தேட்டம்**
**மரியாதை நாணு மகிநலத்துர் கேண்மின்**
**தரியாது காணுந் தன்மை. 8**

**(பொருள்)** உலகத்தில் தேடத்தக்கது மரியாதை மட்டுமே. ஏனென்றால் ஈட்டுகின்ற பொருள் முயற்சியில் எவ்வளவுதான் ஈடுபட்டாலும் அது ஊழ்வினையின் தன்மைக்கேற்பவே சேரும். அதுபோன்றே முன் வினையின் செயலால் கிட்டிய பொருள்களும் நிலைத்து நிற்காது. இதனை உணர்ந்துகொள்ளுங்கள் உலகத்தீரே.

*(சொ-ள்.) ஈட்டும் பொருண்முயற்சி-ஈட்டும் பொருளுக்கான முயற்சி, எண்ணிறந்த வாயினும் ஊழ்-எண்ணற்றதாக இருந்தாலும் விதி, கூட்டும் படியன்றிக் கூடவாம்-எண்ணியபடியேதான் கூடும். தேட்டம் மரியாதை காணு மகிதலத்தீர்-தேடும் எண்ணம்கொண்ட மானிடரே கேண்மின்-கேளுங்கள், தரியாது காணுந் தனம்-எனவே தேடுவது மரியாதை ஒன்றுதான்.*

**ஆற்றுப் பெருக்கற் றடிசுடும் நாளுமவ்வாறு**
**ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும் – ஏற்றவர்க்கு**
**நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்**
**இல்லையென மாட்டார் இசைந்து. 9**

**(பொருள்)** ஆற்றுப் பெருக்கம் இல்லாமல் வற்றிப் போய் அதில் நடப்போரின் காலடிகள் சுடுகின்ற காலத்திலும் அவ் யாறு தன்னிடத்தில் உள்ள ஊற்று நீரால் உலகத்தவரைக் காக்கும். இத்தன்மையைப் போலவே நல்ல குடியில் பிறந்தவர்கள் வறுமையை அனுபவிக்கிற காலத்துத் தங்களிடம் யாசிப்பவர்களுக்கு இல்லை என்று கூறாத உள்ளத்துடன் உதவி செய்வர்.

*(சொ-ள்.) ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந்-ஆற்றில் வெள்ளம் வற்றிய மணலில் அடி சுடும், நாளுமவ்வாறு- நாளில், ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்-என்றாலும் தன்னிடத்தில் உள்ள ஊற்றால் அடுத்தவர் தாகம் தணிக்கும், ஏற்றவர்க்கு- இரந்தவர்க்கு, நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்- நல்லகுடியில் பிறந்தவர் கெட்டு வறுமை வந்துற்றாலும், இல்லையென மாட்டார் இசைந்து-இல்லை என்று கூற மாட்டார் விரும்பிக் கொடுப்பார்.*

**ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்**
**மாண்டார் வருவரோ மாநிலத்தீர் – வேண்டா**
**நமக்கும் அதுவழியே நாம்போம் அளவும்**
**எமக்கென்னென் றிண்டுண் டிரும்.** 10

**(பொருள்)** ஆண்டுக்கு ஆண்டு இறந்த உறவுகளுக் காக அழுது நின்றால் அதனால் மாண்டுபோனவர்கள் ஒருபோதும் திரும்பிவரப் போவதில்லை. எனவே அதற்காக அழவேண்டாம். ஏனென்றால் நமக்கும் அம் மரணம் நிச்சயம். அவ்வழிதான் நாமும் போவோம். எனவே உயிர் உள்ள அளவு நாமும் வாழ்ந்து மற்றவர்களுககும் அறம் செய்து வாழவேண்டும்.

*(சொ-ள்.) ஆண்டாண்டு தோறும் அழுது புரண் டாலும்-ஆண்டுக்கு ஆண்டு இறந்தோர்க்காக அழுது புரண் டாலும், மாண்டார் வருவரோ மாநிலத்தீர்-இறந்து போனவர்*

*வருவாரோ மக்களே, வேண்டா-வேண்டாம், நமக்கும் அது வழியே நாம்போம் அளவும்-அழ வேண்டியதில்லை நாம் இறந்துபோகும் அளவும் அந்த வழிதான், எமக்கென்னென் றிண்டுண் டிரும்-எமக்கு யாது சம்பந்தமென்று இராமல் பிச்சையிட்டு உண்டு கவலையற்று இருங்கள்.*

**ஒருநாள் உணவைஒழி யென்றால் ஒழியாய்**
**இருநாளுக்கு ஏலென்றால் ஏலாய்–ஒருநாளும்**
**என்னோ வறியாய் இடும்பைகூர் என்வயிறே**
**உன்னோடு வாழ்தல் அரிது. 11**

**(பொருள்)** ஒருநாள் உணவை ஒழித்துவிடு என்றால் ஒழிக்கமாட்டாய். இரு நாளைக்கு வேண்டிய உணவை ஏற்றுக்கொள் என்றாலும் ஏறறுக்கொள்ள மாட்டாய். ஒருநாள் கூட என் துன்பத்தையறியாமல் துன்பம் செய்யும் என் வயிறே உன்னோடு நான் வாழ்தல் அரிதாக உள்ளது.

*(சொ-ள்.) ஒருநாள் உணவைஒழி யென்றால்-ஒருநாள் உணவை விட்டிடு என்றால், ஒழியாய்-விடமாட்டாய், இருநாளுக்கு ஏலென்றால் ஏலாய்-கிடைத்தபோது இரண்டு நாளுக்கு ஏற்றுக்கொள் என்றால் ஏற்றுக்கொள்ளமாட்டாய். ஒருநாளும்-ஒருநாள்கூட என்னோ வறியாய்-என் துன்பம் அறியமாட்டாய், இடும்பைகூர் என் வயிறே-துன்பம் மிகுக்கின்ற என்னுடைய வயிறே, உன்னோடு வாழ்தல் அரிது-உன்னோடு கூடி வாழ்தல் எனக்கு அரிதாக உள்ளது.*

**ஆற்றங் கரையின் மரமும் அரசறிய**
**வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே – ஏற்றம்**
**உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்**
**பழுதுண்டு வேறோர் பணிக்கு.**

**(பொருள்)** ஆற்றங்கரையிலுள்ள மரமும் அரசன் போற்ற வாழ்கின்ற பெருமையான வாழ்க்கையும் கூட வீழ்ந்துவிடும். ஏற்றம் என்பது உழுது பயிர் செய்து அதனால் உண்டு வாழ்வதுதான். இதற்கு எதுவும் ஒப்பில்லை என்பதை அறியவேண்டும். உழவு தவிர மற்ற தொழில்களில் பழுதுண்டு என்பதையும் அறியவேண்டும்.

*(சொ-ள்.) ஆற்றங் கரையின் மரமும்-ஆற்றங்கரையிலுள்ள மரமும், அரசறிய வீற்றிருந்த வாழ்வும்-அரசன் அறிய வாழ்ந்திருந்த வாழ்வும், விழுமன்றே-அழிந்துவிடும், ஏற்றம்-உயர்வு, உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை- உழுது பயிர் செய்து வாழ்வதற்கு ஈடில்லை கண்டீர்-காணுங்கள், பழுதுண்டு வேறோர் பணிக்கு-மற்ற வாழ்க்கைக்கெல்லாம் தவறு உண்டு.*

**ஆவாரை யாரே அழிப்பர் அதுவன்றிச்**
**சாவாரை யாரே தவிர்ப்பவர் – ஓவாமல்**
**ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்**
**மெய்யம் புவியதன் மேல்.** 13

**(பொருள்)** அழகிய பூமியின் மேல் ஊழின் பயன் கொண்டு வாழ்பவர்களை வாழாமல் யார் அழிக்க முடியும்? அதுவன்றி இறந்து போகிறவர்களை இறக்காமல் யார் தடுக்க முடியும்? தொடர்ந்து ஓயாமல் பிச்சை யெடுத்து வாழ்வாரை யார் தடுத்து நிறுத்த இயலும் எல்லாம் ஊழின் பயனால் நிகழ்பவை. எனவே எதனையும் தடுத்தல் என்பது இயலாது என்றுணர வேண்டும்.

*(சொ-ள்.) ஆவாரை யாரே அழிப்பர்-வாழ்தற்கு உரியாரை யார் அழிக்கமுடியும்? அதுவன்றிச் சாவாரை யாரே தவிர்ப்பவர்-அதுபோன்றே சாவாரை தவிர்ப்பவர் யார்? ஓவாமல்-ஒழியாமல், ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்-*

*பிச்சைக்குச் செல்வோரை யார் விலக்க முடியும்? மெய்யம் புவியதன் மேல்-உண்மையான இந்த அழகிய பூமியின் மேல், எல்லாம் ஊழின் பயனாகும்.*

**பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்**
**இச்சைபல சொல்லி இடித்துண்கை – சிச்சீ**
**வயிறு வளர்க்கைக்கு மானம் அழியாது**
**உயிர்விடுகை சால உறும். 14**

**(பொருள்)** மானம் கெடாமல் உயிர்விடுதல்தான் மிகச் சிறந்ததாகும். அதாவது பிச்சை எடுத்து பிழைப்பதை விட இழிவானது எதுவென்றால் இச்சையான பலவற்றைப் பேசி ஒருவரிடம் சென்று வேண்டியதைப் பெறுவதாகும். சிச்சீ இப்படி வயிறு வளர்ப்பதைவிட மானம் கெடாமல் உயிர்விடுதல்தான் மிகச் சிறந்ததாகும்.

*(சொ-ள்.) பிச்சைக்கு மூத்த-பிச்சை எடுத்து உண்டலினும், குடி வாழ்க்கை-பெரியகுடி வாழ்க்கையானது, பேசுங்கால்-சொல்லுமிடத்து, இச்சை பல சொல்ல இடித்துண்கை-பலவாகிய இச்சைப் பேச்சுகளைப் பேசி உண்டு வாழ்வது, சிச்சீ-சீ சீ, வயிறு வளர்க்கை-வயிறு வளர்ப்பதற்கு, மானம் அழியர்து-மானம் கெடாமல், உயிர்விடுகை சால உறும்-உயிரை விடுதல் மிகவும் பொருந்தும்.*

சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை–உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும். 15

**(பொருள்)** சிவாய நமவென்று எந்நாளும் சிந்தைக் கொண்டிருப்போர்க்கு ஒருநாளும் எந்த அபாயமும் நேராது. உபாயமும் அறிவும் இதுவேயாகும். விதியை

வெல்வதற்கு. இதுவல்லாமல் மற்ற எதுவும் விதியின் அறிவின்படியே ஆகிவிடும்.

***(சொ-ள்.)*** *சிவாய நமவெனறு-சிவாய நமவென்று, எந்நாளும்-எந்த நாளும், சிந்திப்போருக்கு-நினைத்திருப் போருக்கு, அபாயம் ஒரு நாளும் இல்லை-ஒருபோதும் துன்பம் இல்லை, உபாயம்-உபாயம், இதுவே மதியாகும்-இதுவே அறிவும் உபாயமும் ஆகும், அல்லா வெல்லாம்-மற்ற எல்லாமும், விதியே மதியாய் விடும்-விதியின்படியே ஆகிவிடும்.*

**தண்ணீர் நிலநலத்தால் தக்கோர் குணங்கொடையால்**
**கண்ணீர்மை மாறாக் கருணையால்-பெண்ணீர்மை**
**கற்பழியா ஆற்றல் கடல்சூழ்ந்த வையகத்துள்**
**அற்புதமாம் என்றே அறி. 16**

**(பொருள்)** தண்ணீரின் இயல்பு நிலத்தின் நலத்திற் கேற்பவும் தக்கோரின் இயல்பு அவர்களின் கொடைத் தன்மையாலும் கண்களின் இயல்பு மாறாத கருணைப் பார்வையாலும் பெண்டிரின் இயல்பு அவர்கள் காத்து நிற்கும் கற்பின் வலிமையாலும் ஆகும். இவையாவும் கடல் சூழ்ந்த இவ்வையகத்துள் அற்புதங்களாகும்.

***(சொ-ள்.)*** *தண்ணீர் நில நலத்தால்-தண்ணீரானது நிலத்தின் தன்மையால் தக்கோர் குணங்கொடையால்-நல்லோருடைய குணமான அவர்களின் ஈகையால், கண்ணீர்மை மாறாக் கருணையால்-கண்களுடைய குணமானது நீங்காத அருளினாலும், பெண்ணீர்மை கற்பழியா ஆற்றால்-பெண்ணினுடைய குணமானது கற்புநிலை கெடாத வழியினாலும், கடல் சூழ்ந்த பூமியில், அற்புதமாம் என்றே அறி-அற்புதங்களாகும் என் று அறிவாயாக.*

**செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்**
**எய்த வருமோ இருநிதியம் - வையத்து**
**அறும்பாவம் என்னவெறிந்து அன்றிடார்க் கின்று**
**வெறும்பானை பொங்குமோ மேல். 17**

*(பொருள்)* இவ்வையகத்தில் அறம் செய்தால் பாவம் நீங்குமென்றறியாமல் அன்று அறம் செய்யாமல் விட்டவர்கள் இன்றைக்கு வறுமை வந்துற்ற நிலையில் கடவுளை நொந்துக்கொள்வது என்ன நியாயம்? செய்த தீவினையால் கடவுளை நொந்து கொள்வதால் வந்து விடுமோ செல்வம். வராது எவ்வாறெனில் அடுப்பில் வெறும்பானையை வைத்தால் பொங்குமோ பொங்காது.

*(சொ-ள்.) செய்தீ வினையிருக்கத் - செய்த தீவினை யிருக்க, தெய்வத்தை நொந்தக்கால்-தெய்வத்தை வெறுத்தால், எய்த வருமோ இருநிதியம்-பொருந்த வருமோ பெரு நிதியம், வையத்து-பூமியிடத்து, அறும்பாவம் என்னவறிந்து-அறம் செய்வதினால் பாவம் நீங்கும் என்று அறிந்து, அன்றிடார்க் கின்று-அக்காலத்தில் ஈயார்க்கு (அந்தப் பாவம் இருக்கும்), வெறும்பானை பொங்குமோ மேல்-அடுப்பில் வைத்த வெறும்பானை பொங்குமோ, பொங்காது.*

**பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில்**
**உற்றார் உகந்தார் எனவேண்டார் - மற்றோர்**
**இரணங் கொடுத்தால் இடுவர் இடாரே**
**சரணங்க கொடுத்தாலுந் தாம். 18**

**(பொருள்)** பெற்றவர்கள், பிள்ளைகள், உலத்தவர், உறவுகள், விருப்பமானவர்கள் என இவர்களையெல்லாம் நினைத்து உதவமாட்டார்கள் உலோபிகள். இவர்கள் அடைக்கலமாக வந்து நின்றாலும் தரமாட்டார்கள். ஆனால் தமக்குக் கேடு செய்வோருக்கு, உடலில் காயம் ஏற்படத் துன்புறுத்துவாருக்குக் கொடுப்பார்கள்.

*(சொ-ள்.) பெற்றார் பிறந்தார் பெருநட்டார்-பெற்றவர்கள், பிள்ளைகள், பெரிய தேசத்தார், உற்றார்-உகந்தார் என வேண்டா-சுற்றத்தார், நேசித்தவர் என்று விரும்பாத உலோபியர்கள், மற்றோர் இரணங் கொடுத்தால்-பிறர், தம்முடம்பிலே புண் கொடுத்தால், இடுவர்-கொடுப்பர், இடாரே-ஒன்றுங் கொடுக்கமாட்டார், சரணம் கொடுத்தாலும்-தம்மிடம் அடைக்கலம் புகுந்தாலும்.*

**சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர்க் கடல்கடந்தும்**
**பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்-போலவிபபம்**
**பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்**
**நாழி அரிசிக்கே நாம். 19**

**(பொருள்)** வயிற்றின் கொடுமையால் நாம் பிறரைச் சேவிக்கிறோம், சென்று இரங்கி (பிச்சை) கேட்கிறோம், நீர் நிறைந்த கடல் தாண்டியும் சென்று நமக்கு வேண்டியவரிடத்துப் பாவித்து நிற்கிறோம். இந்த உலகத்தை ஆளவேண்டும் ஆள்கிறோம், பாராட்டு கிறோம் அழியக்கூடிய இந்த உடலின் நாழி அரிசிக்காக வீடுபேறு நெறியில் செல்வதற்கான அரிய மனித வுடம்பினை.

*(சொ-ள்.) சேவித்துஞ்-சேவித்து, சென்றிரந்துந்-சென்று இரந்தும், தெண்ணீர்க் கடல் கடந்தும்-நீர் நிறைந்த கடல் கடந்து வேறு நாடு சென்றும், பாவித்தும்-பார்த்தும், பாராண்டும்-நாட்டை ஆண்டும், பாட்டிசைத்தும்-பாட்டுப் பாடியும் பிறரைப் புகழ்ந்து, போவிப்பம்-செலுத்துகின்றோம். பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்-பாழான இந்த உடம்பை வயிற்றுக்காக, நாழி அரிசிக்கே நாம்-நாழி அரிசி யாசிக்கவே நாம்.*

**அம்மி துணையாக ஆறிழிந்த ஆறொக்குங்**
**கொம்மை முலைபகர்வார்க் கொண்டாட்டம்-இம்மை**
**மறுமைக்கும் நன்றன்று மாநிதியம் போக்கி**
**வெறுமைக்கு வித்தாய் விடும். 20**

**(பொருள்)** அம்மியைத் துணையாகக் கொண்டு ஆற்று வெள்ளத்தில் இறங்கியது போன்றதாகும். விலை மகளிரைக் கொண்டாடுவது இச்செயல் இம்மைக்கு மட்டுமல்லாது மறுமைக்கு நல்லதல்ல. எவ்வளவு செல்வ மிருந்தாலும் அதனை அழித்துவிடும். வறுமைக்குக் காரணமாகிவிடும்.

*(சொ-ள்.) அம்மித் துணையாக-அம்மிக்கல்லே துணையாக, ஆறறிந்த ஆறொடுக்குங்-ஆற்று வெள்ளத்தில் இறங்கிய தன்மையைப் போலும், கொம்மை முலை பகர்வார்க் கொண்டாட்டம்-திரட்சியான தனங்களைக் கொண்ட, அவற்றை விற்கின்ற பரத்தையரைக் கொண்டாடுதல், இம்மை மறுமைக்கும்-இப்பிறவிக்கு மட்டுமில்லாமல் மறுபிறவிக்கும், நன்றன்று-நல்லதல்ல, மாநிதியம் போக்கி-பெருஞ்செல்வத்தை இழந்து, வெறுமைக்கு வித்தாய் விடும்-வறுமைக்குக் காரணமாகி விடும்..*

**நீரு நிழலு நிலம்பொதியும் நெற்கட்டும்**
**பேரும் புகழும் பெருவாழ்வும் – ஊரும்**
**வருந்திவரும் வாழ்நாளும் வஞ்சமில்லார்க்கு என்றுந்**
**தருஞ்சிவந்த தாமரையாள் தான். 21**

**(பொருள்)** நீர் வளத்தையும் நில வளத்தையும் நிலத்திலே விளையும் நெற்போரையும் பெருமைமிகு பேரும் புகழும் நீண்ட ஆயுளைடைய வாழ்வையும் ஊரையும் வளர்கின்ற செல்வத்தையும் வஞ்சமில்லாத வர்களுக்குச் சிவந்த தாமரையின் மேல் வீற்றிருக்கும் மகாலட்சுமி என்றும் கொடுத்து அருள்வாள்.

*(சொ-ள்.) நீரு நிழலு நிலம்பொதியும்-நீர் வளத்தையும் நில வளத்தையும் நிலத்தில் நிறையும், நெற்கட்டும் பேரும் புகழும்-நெற்போரையும் பேரும் புகழையும், பெரு வாழ்வும்-பெரிய வாழ்வையும், ஊரும்-ஊரும், வருந்தி வரும் வாழ் நாளும்-நிறைந்த ஆயுளையும், வஞ்சமில்லார்க்கு-வஞ்சனை இல்லாதவருக்கு, என்றுந்-என்றும், தருஞ்சிவந்த தாமரையாள் தான்-செந்தாமரை மலரில் இருக்கின்ற திருமகள் தருவாள்.*

**பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்**
**கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் - கூடுவிட்டிங்**
**காவிதான் போயினபின்பு யாரே அனுபவிப்பார்**
**பாவிகாள் அந்தப் பணம். 22**

**(பொருள்)** உடலை வருத்திப் பாடுபட்டுத் தேடிய செல்வத்தைப பூமியில் புதைத்து வைத்துப் பழகும் மானிடரே கேளுங்கள்! அவற்றால் அடையும் நன்மை எதுவுமில்லை. உடலை விட்டு உயிர் போய்விட்டால அந்தச் செல்வத்தை யார் அனுபவிக்க முடியும்? அறியாமையால் செய்யும் செயலை என்னவென்பது?

*(சொ-ள்.) பாடுபட்டுத் தேடிப் பணத்தைப்-வருந்தி யுழைத்துச் சேர்த்த பணத்தை, புதைத்துவைத்துக்-புதைத்து, கேடுகெட்ட மானிடரே-நன்மை எல்லாவற்றையும் இழந்த மானிடரே, கேளுங்கள்-கேட்பீராக, கூடுவிட்டிங் காவிதான்-உடலை விட்டு உயிர்தான், போயினபின்பு யாரே யனுபவிப்பார்-போனபின்னால் யார் அனுபவிக்க முடியும்? பாவிகாள்-பாவிகளே, அந்தப் பணம்.*

**வேதாளஞ் சேருமே வெள்ளருக்குப் பூக்குமே**
**பாதாள மூலி படருமே - மூதேவி**
**சென்றிருந்த வாழ்வளே சேடன் குடிபுகுமே**
**மன்றோரஞ் சொன்னார் மனை. 23**

**(பொருள்)** அறச்சபையில் அதாவது நீதிமன்றத்தில் ஒருவருக்கு எதிராகப் பொய்சாட்சி கூறுபவர் வீட்டில் வேதாளங்கள் குடிபுகும். வெள்ளருக்குச் செடி பூக்கும். பாதாள மூலி எனும் கொடி படரும், மூதேவி சென்று நிலைபெற்று வாழ்வாள். பாம்புகள் குடிபுகும்.

*(சொ-ள்.) வேதாளஞ் சேருமே-பேய வந்து சேரும், வெள்ளெருக்குப் பூக்குமே-வெள்ளெருக்கு முளைக்கும், பாதாள மூலி படருமே-பாதாள மூலி படருமே-பாதாளத்தில் வளரும் மூடி எனும் கொடி படரும், மூதேவி சென்றிருந்து வாழ்வளே-மூதேவி சென்று குடியிருப்பாள், சேடன் குடிபுகுமே-பாம்புகள் குடிபுகும், மன்றோரஞ் சொன்னார் மனை-அறச்சபையில் ஓரஞ் (பொய்) சொன்னவருடைய வீட்டிலே.*

**நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா உண்டிபாழ்**
**ஆறில்லா ஊருக் கழகுபாழ்-மாறில்**
**உடன்பிறப் பில்லா உடம்புபாழ் பாழே**
**மடக்கொடி யில்லா மனை. 24**

**(பொருள்)** திருநீறு அணியாத நெற்றி பாழாகும், நெய் சேர்த்துக்கொள்ளாத உணவு பாழாகும். ஆறில்லாத ஊர் அழகற்றுப் பாழாகும். மாறுபடாத சகோதரர் இல்லாத உடம்பு பாழாகும். மனைவியில்லாத வீடு பாழாகும். எனவே வாழ்க்கையின் மாண்புகள் எனப்படுபவை நெற்றியில் திருநீறணிதலும், உணவுடன் நெய் சேர்த்து உண்ணலும், ஆறுள்ள ஊரில் வசித்தலும் மாறுபடாத சகோதரர் உள்ளமையும் மனைவியோடும் இருத்தலுமாகும்.

*(சொ-ள்.) நீரில்லா நெற்றி பாழ்-விபூதியில்லாத நெற்றி பாழாகும், நெய்யில்லா உண்டி பாழாகும்-நெய் இல்லா உணவு பாழாகும், ஆறில்லா ஊருக் கழகு பாழ்-ஆறு இல்லாத ஊர் அழகற்றுப் பாழாகும். மாறில் உடன்பிறப் பில்லா*

*உடம்பு பாழ்-மாறுபடாத சகோதரர் இல்லாத உடம்பு பாழாகும். பாழே-வீணே, மடக்கொடியில்லா மனை-இல்லறத்திற்கு உரிய மனைவியில்லாத வீடு பாழேயாகும்.*

**ஆன முதலில் அதிகஞ் செலவானான்**
**மானம் அழிந்து மதிகெட்டுப் – போனதிசை**
**எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்புந் தீயனாய்**
**நல்லார்க்கும் பொல்லனாம் நாடு. 25**

**(பொருள்)** ஒருவன் தனக்குக் கிடைக்காத வருமானத்திற்கு மேல் அதிகமாக செலவு செய்தால் மானத்தை இழக்க நேரிடும். அறிவுநிலை கெட்டுப் போகும். சென்ற திசையில் எல்லாம் கள்வன் என்கிற பழிச்சொல்லுக்கு ஆளாக நேரிடும். ஏழ்ப் பிறவியிலும் தீயவனாய் உணரப்படுவான். நல்லவர் யாவரும் தீயவன் என்று இகழப்படும் நிலைக்கும் தள்ளப்படுவான்.

*(சொ-ள்.) ஆன முதலில் அதிகம் செலவானான்-தன்னிடமுள்ள முதலில் அதிகம் செலவானால், மானம் அழிந்து மதிகெட்டுப்-மானம் இழந்து அறிவிழந்து போகும். போனதிசை-ஓடிப்போன திசையிலும், எல்லார்க்கும் கள்ளனாய்-எல்லோருக்கும் திருடனாகி, ஏழ்ப்பிறப்புந் தீயனாய்-ஏழு பிறவியிலும் பொல்லாதவன் ஆகி, நல்லார்க்கும் பொல்லனாம் நாடு-தன்னிடம் அன்பு வைத்த நல்லவர் களுக்கும் பொல்லாதவன் ஆகிவிடுவான்.*

**மானங் குலக்கல்வி வண்மை அறிவுடைமை**
**தானந் தவம்உயர்ச்சி தாளாண்மை-தேனின்**
**கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்**
**பசிவந் திடப்பறந்து போம். 26**

**(பொருள்)** ஒருவனுக்குப் பசி வந்துவிட்டால் அவனுக்குரிய மானம், குடிப்பிறப்பு, கல்வி, கொடைத்

தன்மை, அறிவுடைமை, தானம், தவம், உயர்வு, முயற்சி, பெண்கள் மீது ஆசை என்கிற பத்தும் நீங்கிவிடும்.

*(சொ-ள்.) மானம், குலக்கல்வி, வண்மை-மானம், குலத்தின் கல்வி, ஈகை, அறிவுடைமை, தானந் தவம் உயர்ச்சி தாளாண்மை-அறிவு, ஈகை, தவம், உயர்வு, தேனின் கசிவந்த சொல்லியர்மேல்-தேன்போலும் சொல்லையயுடைய மங்கையர் மேல் வைத்த ஆசையும், காமுறுதல்-காமுறுதல் பத்தும்-ஆகிய இவை பத்தும் பசிவந் திடப்பறந்து போம்-பசி வந்துவிட்டால் விட்டோடிப் போகும் இவை.*

**ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும்**
**அன்றி அதுவரினும் வந்தெய்தும்-ஒன்றை**
**நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்**
**எனையாளும் ஈசன் செயல். 27**

**(பொருள்)** ஒன்றை நினைத்தால் அது கிடைக்காமல் வேறொன்று கிடைக்கும். அல்லது நினைத்த ஒன்றே கிடைக்கவும் செய்யும். ஒரு பொருளை நினையாத போது அதுகூட முன் வந்து நிற்கும். இவையாவும் ஈசனின் செயலேயாகும். அவன் செயலன்றி உயிர்களுடைய நினைப்புப்படி ஒன்றும் நடவாது.

*(சொ-ள்.) ஒன்றை நினைக்கின்-ஒரு பொருளை பெற நினைத்தால், அதுவொழிந்திட் டொன்றாகும்-அப்பொருள் கிடைக்காமல் வேறொன்று கிட்டும். அன்றி அதுவரினும் வந்தெய்தும்-அல்லது அதுவே வந்து சேரும், ஒன்றை நினையாத-ஒன்றை நினைக்காத போது, முன்வந்து நிற்பினும்-அது முன்வந்து, நின்றாலும் நிற்கும், எனையாளும் ஈசன் செயல்-இவையாவும் நம் செயலல்ல அது ஈசனின் செயலாகும்.*

**உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்**
**எண்பது கோடிநினைந்து எண்ணுவன-கண்புதைந்த**
**மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்**
**சாந்துணையுஞ் சஞ்சலமே தான். 28**

**(பொருள்)** உண்பது நாழி உணவுதான் உடுப்பதும் நான்கு முழ உடைதான். ஆனால் எண்ணும் எண்ணமோ எண்பதுகோடியாக உள்ளது. உள்ளம் குருடாயிருக்கிற மக்களுடைய வாழ்க்கையானது இவ்வாறிருந்தால் மண்ணால் செய்த கலத்தைப்போல உயிர்போகும்வரை சஞ்சலமாகவே இருக்கும்.

*(சொ-ள்.)* *உண்பது நாழி-உண்பது நாழியரிசி உணவாகும், உடுப்பது நான்கு முழம்-உடுத்துவது நான்கு முழம், எண்பது கோடி நினைந்து எண்ணுவான்-நினைத்து எண்ணும் காரியங்கள் எண்பது கோடி கண்புதைந்த-அக்கண் குருடாயிருக்கிற, மாந்தர் குடிவாழ்க்கை-மக்களின் குடி வாழ்க்கையானது, மண்ணின் கலம்போலச்-மண்ணால் செய்யப்பட்ட கலம்போல, சாந்துணையுஞ் சஞ்சலமே தான்-இறக்குமளவும், துன்பமாகவே இருக்கிறது.*

**மரம்பழுத்தால் வெளவாலை வாவென்று கூவி**
**இரந்தழைப்பார் யாவருமங் கில்லை-சுரந்தமுதம்**
**கற்ற தால்போற் கரவாது அளிப்பரேல்**
**உற்றார் உலகத் தவர். 29**

**(பொருள்)** மரம் பழுத்துவிட்டால் வெளவாலை வாவென்று அழைத்து உண்ணச் சொல்வதற்கு அம்மரத்தின் அருகே யாருமில்லை. அதுபோல பசுவானது தன்னுடைய பாலை ஒளித்து வைப்பதுமில்லை. எனவே தம்மிடம் உள்ள பொருளை ஒளிக்காமல் ஈந்தால் உலகத்தவரும் உறவினர் ஆவர்.

*(சொ-ள்.) மரம் பழுத்தால்-மரம் பழுத்திருந்தால் வௌவாலை வாவென்று-சாப்பிட வாவென்று வௌவாலை, கூவி இரந்தழைப்பார் யாவருமங் கில்லை-உரத்து அழைப்பவர் அம் மரத்தருகில் ஒருவரும் இல்லை, சுரந்தமுகம்-கற்றா தரல்போற்-கன்றையுடைய பசுவானது பாலை சுரந்து கொடுப்பது போல, கரவாது அளிப்பரேல்-ஒளிக்காது அளிப்பார்கள், உற்றார் உலகத்தவர்-உலகத்தால் உறவினராவர்.*

**தாந்தாமுன் செய்தவினை தாமே யனுபவிப்பர்**
**பூந்தா மரையோன் பொறிவழியே-வேந்தே**
**ஒறுத்தாரை யென்செயலாம் ஊரெல்லாம் ஒன்றா**
**வெறுத்தாலும் போமோ விதி. 30**

**(பொருள்)** மன்னா... ஒவ்வொருவரும் செய்த வினை பலனை அந்த கடவுள் விதிப்படியே அவரே அனுபவிப்பார்கள். ஊழின் காரணமாகத் தூண்டப் பட்டுத் தீமை புரிந்தவர்களை நாம் என்ன செய்யமுடியும்? ஊரெல்லாம் கூடி வெறுத்தாலும் போய்விடுமோ விதி விட்டுவிட்டு? போகாது.

*சொ-ள்.) தாந்தா முன் செய்தவினை-தாம் முற் பிறப்பில் செய்த வினை, தாமே யனுப்பவிப்பர்-தாமே அனுபவிப்பார்கள், பூந்தா மரையோன் பொறிவழியே-தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன் விதித்தபடியே, வேந்தே-அரசே, ஒறுத்தாரை யென்செயலாம்-தீங்கு செய்தாரை, ஊரெல்லாம் ஒன்றா வெறுத்தாலும்-ஊரெல்லாம் கூடி வெறுத்தாலும், போமோ விதி-அவருக்கான விதி போகாது.*

**இழுக்குடைய பாட்டிற்கு இசைநன்று சாலும்**
**ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று - வழுக்குடைய**
**வீரத்தின் நன்று விடாநோய் பழிக்கஞ்சாத**
**தாரத்தின் நன்று தனி. 31**

**(பொருள்)** இழுக்குடைய பாட்டைவிட அப் பாட்டின் ஓசை நன்றாகும். உயர்குலத்தில் பிறந்திருக் கிறோம் என்று கூறுவதைவிட ஒழுக்கம் நன்றாகும். தோற்றுவிட்ட வீரத்தைவிட நீங்காமல் நிலைத்திருக்கும் நோய் நன்றாகும். பழிக்கு அஞ்சாத மனைவியுடன் வாழ்வதைவிடத் தனித்து வாழ்வது நன்றாகும்.

*(சொ-ள்.) இழுக்குடைய பாட்டிற்கு இசை நன்று-இலக்கண வழுவுடைய செய்யுளைவிட வழக்கு நல்லது, சாலும் ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று-உயர்குலத்தின் ஒழுக்கம் நன்று, வழுக்குடைய வீரத்தின் நன்று விடாநோய்-தவறுதலையுடைய வீரத்தினும் விடா நோய் நன்று, பழிக்கஞ்சாத தாரத்தின் நன்று தனி-பழிக்கு அஞ்சாத மனைவியுடன் கூடிவாழ்வதினும் தனித்து இருப்பது நன்று.*

**ஆறிடும் மேடும் மடுவும்போல் ஆஞ்செல்வம்**
**மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர் – சோறிடுந்**
**தண்ணீர் வாரும் தருமமே சார்பாக**
**உண்ணீர்மை வீறும் உயர்ந்து. 32**

**(பொருள்)** ஆற்றிலே தோன்றி மறையும் மேடும் பள்ளமும் போல செல்வமும் தேயும் வளரும் மக்களே... எனவே நிலையற்ற செல்வம் இருக்கும்போதே வறியவர்க்குச் சோறீட்டு நீரை தாருங்கள். இந்த அறச் செயலே உள்ளத்தில் உயர்ந்து நிற்கும் தன்மை கொண்டதாகும்.

*(சொ-ள்.) ஆறிடும் மேடும் மடுவும்போல் ஆஞ் செல்வம்-ஆற்று வெள்ளத்தினால் உண்டாகும் மேடும் பள்ளமும் போல செல்வம், மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர்-மாறும், உயரும் மக்களே, சோறிடுந் தண்ணீரும்-இரப்பவருக்குத் தண்ணீரும் அன்னமும், வாரும் தருமமே*

*சார்பாக-இந்தத் தரும்மே துணையாக, உண்ணீர்மை வீறும் உயர்ந்து-உள்ளத்திலே தூயத்தன்மை ஓங்கி விளங்கும்.*

**வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்தில்**
**பட்டுருவுங் கோல்பஞ்சில் பாயாது-நெட்டிருப்புப்**
**பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்**
**வேருக்கு நெக்குவிடும். 33**

**(பொருள்)** வன் சொற்கள் இனிய சொற்களை ஒருபோதும் வெல்லமுடியாது. எவ்வாறெனில் வலிய யானையின் மேல் பாயும் அம்பானது மெல்லிய பஞ்சில் பாயாது. பழமையான இரும்புப் பாரைக்குப் பிளக்காத பாறையானது பசுமரத்தின் வேருக்கு வழிவிட்டு விடுவதைப்போல.

*(சொ-ள்.) வெட்டனவை மெத்தனவை வெல்லவாம்-வன்சொற்கள் ஒருபோதும் இன்சொற்களை வெல்லாது. வேழத்தில்-யானையின் மீது, பட்டுருவங் கோல்பஞ்சில்-பட்டுருவும் அம்பானது பஞ்சில் பாயாது, நெட்டிருப்புப் பாரைக்கு-நெடுமையாகிய இரும்புப் பாரைக்கும, நெக்கு விடாத பாறை-வழிவிடாத கற்பாறை, பசுமரத்தின்-பச்சை மரத்தின், வேருக்கு நெக்கு விடும்-வேருக்குப் பிளந்துவிடும்.*

**கல்லானே யானாலுங் கைபொருளொன் றுண்டாயின்**
**எல்லாருஞ் சென்றங்கு எதிர்கொள்வர் – இல்லானை**
**இல்லாளும் வேண்டாள்மற்று ஈனறெடுத்த**
**தாய்வேண்டாள்**
**செல்லாது அவன்வாயிற் சொல். 34**

**(பொருள்)** படிக்காதவனாக இருந்தாலும் அவனிடத்தில செல்வம் இருந்தாலும் எல்லாரும் சென்று அவனை எதிர்கொள்வார்கள். அதே சமயம் படித்தவனாக

இருந்தாலும் அவனிடத்தில் செல்வம் இல்லையெனில் கட்டிய மனைவி, ஈன்ற தாய் யாரும் விரும்ப மாட்டார்கள். அவன் வாயிலிருந்து பிறக்கும் சொல்லும் செல்லாச் சொல் ஆகிவிடும்.

*(சொ-ள்.) கல்லானே யானாலுங்-கற்காதவனாக இருந்தாலும், கைப்பொருளொன்றுண்டாயின்-கைப் பொருள் ஒன்று அவனிடத்தில் இருக்குமாயின், எல்லாருஞ் சென்றங்கு எதிர்கொள்வர்-எல்லோரும் போய் எதிர்கொண்டு உபசரிப்பர், இல்லானை-பொருள் இல்லாதவனை, இல்லாளும் வேண்டாள்மற்று-அவன் மனைவியும் விரும்ப மாட்டாள், வேண்டாள், ஈன்றெடுத்த தாய்வேண்டா-பெற்ற தாயும் விரும்பமாட்டாள், செல்லாது அவன்வாயிற் சொல்-அவன் வாயில் பிறக்கும் சொல்லானது பயன்படாது மதிக்கப்படமாட்டாது.*

**பூவாதே காய்க்கும் மரமுமுள மக்கருளும்**
**ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே – தூவா**
**விரைத்தாலும் நன்றாகா வித்தெனவே பேதைக்கு**
**உரைத்தாலுந் தோன்றா துணர்வு, 35**

**(பொருள்)** பூக்காமல் காய்க்கின்ற மரங்கள் உண்டு. மக்களுள் ஏவாமல் தானே அறிந்துகொள்ளும் அறிவாற்றல் மிக்கோரும் உண்டு. என்னதான் தூவி விதைத்தாலும் முளைத்துப் பயன்படாத விதைபோல மூடர்களுக்கு என்ன சொன்னாலும் அறிவு உண்டாகாது.

*(சொ-ள்.) பூவாதே காய்க்கும் மரமுமுள்-பூக்காமல் காய்க்கின்ற மரமுண்டு, மக்களுளும் ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே-மனிதர்களுக்குள்ளே ஏவாமல் தாமே அறிந்து கொள்ளும் வல்லவரும் உண்டு, தூவா விரைத்தாலும் நனறாகா-தூவி விதைத்தாலும் பயன்படாத, வித்தெனவே-விதைபோலவே, பேதைக்கு உரைத்தாலும் தோன்றா*

*துணர்வு-மூடனுக்கு எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் அறிவு அவனிடத்து உண்டாகாது.*

**நண்டுசிப்பி வேய்கதலி நாசமுறுங் காலத்தில்**
**கொண்ட கருவளிக்குங் கொள்கைபோல்–ஒண்டொடீ**
**போதந் தனங்கல்வி பொன்றவருங் காலம்அயல்**
**மாதர்மேல் வைப்பார் மனம். 36**

**(பொருள்)** நண்டு, சிப்பி, வாழை என்ற மூன்றும் கருவை ஈனும் காலத்தில் அழியும். அதுபோல ஒருவன் பிற பெண்கள் மீது இச்சை கொள்ளும்போது அவனுடைய செல்வம், கல்வி அழியும். எனவே பிற மாதர்மேல் ஆசை வைக்கக்கூடாது.

*(சொ-ள்.) நண்டுசிப்பி வேய்கதலி நாசமுறுங்க காலத்தில்-நண்டும் சிப்பியும் மூங்கிலும் வாழையும் நாசம் உறும் காலத்தில், கொண்ட கருவளிக்குங் கொள்கைபோல்-தாம்அழிவடையுங் காலத்தில் ஈனும் தன்மைபோல, ஒண்டொடி-ஒள்ளிய வளையலை அணிந்தவளே, போதந் தனங்கல்வி-ஞானமும் செல்வமும், பொன்றவருங் காலம் அயல்-வித்தையும் அறியவரும் காலத்தில், மாதர்மேல் வைப்பார் மனம்-பிற மாதர்களிடத்து மனம் வைப்பார்.*

**வினைப்பயனை வெல்வதற்கு வேதம் முதலாம்**
**அனைத்தாய நூலகத்தும் இல்லை –**
**நினைப்பதெனக்**
**கண்ணுறுவது அல்லால் கவலைபடேல்**
**நெஞ்சேமெய்**
**விண்ணுறுவார்க் கில்லை விதி. 37**

**(பொருள்)** வினைப்பயன் வெல்வதற்கு வேதம் முதலாகிய அனைத்து நூல்களையும் கற்பதால் உதவா

வீட்டு நெறியில் நிற்பவர்க்கு ஊழின்படி நினைப்பது போல தோன்றும் எனவே மனமே கவலைப்படாதே.

*(சொ-ள்.) வினைப்பயன் வெல்வதற்கு-இருவினைப் பயனை வெல்வதற்கு, வேதம் முதலாம்-வேதம் முதலானவற்றை, அனைத்தாய நூலகத்தும் இல்லை- எல்லா நூல்களையும் கற்பதால், நினைப்பதெனக்-நினைப்பது போல, கண்ணுறுவது அல்லால்-அவர் நினைப்பதுபோலத் தோன்றுவது, அல்லாது-அல்லாமல், கவலைபடேல், நெஞ்சமெய்-கவலைப்படாதே நெஞ்சே மெய்யாகிய, விண்ணுறுவார்க் கில்லை விதி - வீட்டு நெறியில் நிற்பார்க்கு ஊழ் இல்லையாம்.*

**நன்றென்றும் தீதென்றும் நானென்றும் தானென்றும்**
**அன்றென்றும் ஆமென்றும் ஆகாதே-நின்றநிலை**
**தானதாந் தத்துமாஞ் சம்பறுத்தார் யாக்கைக்குப்**
**போனவா தேடும் பொருள். 38**

**(பொருள்)** இவை நல்லதென்றும் அவை தீயதென்றும் இது நானென்றும் அது தானென்றும் அன்றென்றும் ஆமென்றும் பேதம் செய்யாமல் இறைவனிடம் இரண்டறக் கலந்து நிற்கவேண்டும். ஒருவன் இதுவறியாமல் தனக்கு அயலாய் கடவுளைத் தேடுவது சம்பப்புல்லை அறுத்தவர் அதனைக் கட்டுவதற்கு அது கயிறென்று அறியாமல் தேடுவதுபோல ஆகும்.

*(சொ-ள்.) நன்றென்றும் தீதென்றும்-நல்லதென்றும் தீயதென்றும், நானென்றும் தானென்றும்-நான் என்றும், அவன் என்றும், அன்றென்றும் ஆமென்றும் ஆகாதே-அன்று என்றும் ஆம் என்றும் ஆகாதே, நின்றிநிலை-நின்ற நிலை, தானதாந்தத்துவமாஞ் சம்பறுத்தார்-ஆன்மாவாகிய தான்,*

*அதுவாகிய உண்மைநிலை, யாக்கைக்கு-உடம்பிற்கு, போனவா தேடும் பொருள்-தன்னின் வேறாகிய கடவுளைத் தேடுவது.*

**முப்பதாம் ஆண்டளவில் மூன்றிற்று ஒருபொருளைத்**
**தப்பாமல் தன்னுள் பெறானாயின் – செப்புங்**
**கலையளவே ஆகுமாம் காரிகையார் தங்கள்**
**முலையளவே ஆகுமாம் மூப்பு. 39**

***(பொருள்)*** முப்பது வயதிற்குள் காமம், வெகுளி, மயக்கம் என்ற முக்குற்றங்களையும் நீக்கி இறைவனை தன் உள்ளத்தால் உணரவேண்டும். அவ்வாறு இல்லை யானால் அழகிய பெண்கள் முதுமையில் தன் கணவருடன் இன்பத்தை அனுபவிக்காமல் விளங்குவதை போலாகும்.

***(சொ-ள்.)*** *முப்பதாம் ஆண்டளவில்-முப்பது வயதிலே, மூன்றற்று ஒருபொருளைத்-முக்குற்றமும் ஒழியப்பெற்று கடவுளை, தப்பாமல் தன்னுள் பெறானாயின்-தவறாமல் தன்னுள்ளே கடவுளை அடையானாயின், செப்புங் கலையளவே ஆகுமாம்-அவன் முதுமையில் பதியுடன் கூட இன்பம் நுகரப்பெறாமல் கற்கும் கல்வியை உடையவனாதல் மாத்திரமே ஆவான்.*

**தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்**
**மூவர் தமிழும் முனிமொழியும் – கோவை**
**திருவா சகமும் திருமூலர் சொல்லும்**
**ஒருவா சகமென் றுணர். 40**

**(பொருள்)** திருக்குறளும் நான்கு வேதங்களைக் கொண்ட உபநிடதங்கள, ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகியோரின் தேவாரமும் மேலும் திருக்

கோவையார், திருவாசகம், திருமந்திரம் ஆகியன எல்லாம் உரைப்பது ஒருபொருளையே.

*(சொ-ள்.) தேவர் குறளும்-திருக்குறளும், திருநாள் மறைமுடிவும்-சிறப்புப் பொருந்திய நான்கு வேதங்களின் முடிவும், மூவர் தமிழும்-மூவரின் தேவாரமும், முனி மொழியும்-மாணிக்கவாசகரின் மொழியுமாகிய, கோவை திருவாசகமும்-கோவை, திருவாசகமும், திருமூலர் சொல்லும்-திருமூலருடைய திருமந்திரமும், ஒருவாசகமென்றுணர்-எல்லாமும் கூறுவது ஒருபொருளையே என்று உணர்.*


0578